# தினபூமி

thinaboomi.com

பூமி: 31 சுற்று: 288 புரட்டாசி 05

Regd. No.TRY/050/2023-2025 RNI Regn. No.61511/94

திருச்சி, ஞாயிறு, செப்டம்பர் 21, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**காசாவில் தீவிரமடையும் போர்: இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதங்களை வழங்க அதிபர் ட்ரம்ப் நிர்வாகம் ஒப்புதல்**

....2-ம் பக்கம்

**இந்திய ராணுவத்தில் பள்ளி மாணவர்கள் சேர வேண்டும்: தலைமை தளபதி அழைப்பு**

...3-ம் பக்கம்

**டி-20 கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்: அர்ஷ்தீப் சிங் முன்னேற்றம்**

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், 26 மாவட்டங்களில் 94 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை திறந்து வைத்து, 21 மாவட்டங்களில், 277 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என். நேரு, மா.சுப்பிரமணியன், எஸ்.எம்.நாசர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சி.வி. கணேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிகளில் சாதி உணர்வு, பாலின பாகுபாடு போன்ற

# பிற்போக்குத்தனம் ஏற்படாமல் மாணவர்களை பாதுகாக்க வேண்டும்

## சென்னையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் ஆசிரியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, செப். 21-

**சென்னையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்துகொண்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், மாணவர்களின் வெற்றிக்கு ஆசிரியர் காரணம் என சொல்வதுதான் மிகப்பெரிய விருது, மாணவர்களிடம் எதையும் அன்புடன் சொல்லுங்கள், அழுத்தம் கொடுக்க வேண்டாம் என்றும் பள்ளிகளில் மாணவர்களுக்கு சாதி உணர்வு, பாலின பாகுபாடு, போன்ற பிற்போக்குத்தனம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும் என்றும் அவர் ஆசிரியர்களுக்கு அறிவுறை வழங்கியுள்ளார்.**

### அறிவாற்றலை வளர்க்க

சென்னையில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்துகொண்டு பேசிய தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், எதுவானாலும் கூகுள், செயற்கை நுண்ணறிவியிடம் (ஏஐ) கேட்டுக் கொள்ளலாம் என மெத்தனத்தில் இருந்துவிடக் கூடாது.

மாணவர்களின் சிந்தனையை தூண்டி, அறிவாற்றலை வளர்க்க வேண்டும். தொழில்நுட்பம், மனித சந்ததிக்கான வேறுபாட்டை புரிய வைக்க வேண்டும். இலக்கியங்கள், பொது அறிவு, சமூக ஒழுக்கம், சுற்றுச்சூல் குறித்து புரிய வைக்க வேண்டும்.

### உள்கட்டமைப்பு தரம்...

மாணவர்களுக்கு எந்தளவு அறிவாற்றல் முக்கியமோ உடல்நலமும் முக்கியமும். மாணவர்களின் குடும்ப சூழல், பின்புலம் அறிந்து ஆசிரியர்கள் செயல்பட வேண்டும். நீங்கள்தான் இரண்டாவது பெற்றோர். திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு கல்வி சூழலில் மிகப்பெரிய மாற்றங்களை கொண்டு வந்துள்ளோம். அரசுப் பள்ளி மாணவர்கள் பெருமையின் அடையாளமாக உயர்ந்து வருகின்றனர். பள்ளிகளின் உள்கட்டமைப்பு தரம் உயர்ந்துள்ளது. மாணவர்களுக்கு சாதி உணர்வு, பாலின பாகுபாடு, போன்ற பிற்போக்குத்தனம் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டும்.

### அன்புடன் சொல்லுங்கள்...

சமத்துவம், சமூக நீதி தேவை பற்றி மாணவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். எதற்கு, எப்படி? என கேட்கும் பகுத்தறிவு மிக்க தலைமுறையாக மாணவர்களை உருவாக்க வேண்டும். புதுப்புது முயற்சியை எடுக்க வேண்டும். அதன் மூலம் மாணவர்களின் எதிர்காலத்தை மாற்றியமைக்க வேண்டும். மாணவர்களிடம் எதையும் அன்புடன் சொல்லுங்கள். அவர்களுக்கு அழுத்தத்தைக் கொடுக்காதீர்கள்.

மாணவர்களுக்குத்தான் ஆசிரியக் பாடம் எடுப்பார்கள். ஆசிரியர்களுக்கே பாடம் எடுத்தவர் அமைச்சர் அன்பில் மகேஸ். ஆசிரியர்கள் பாடங்களை மட்டும் அல்ல கல்வியுடன் அனுபவத்தையும் மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பவர்கள். மாணவர்களின் சிந்தனையை தூண்டி, அறிவை மேம்படுத்த வேண்டியது நமது கடமை என்று தெரிவித்துள்ளார்.

# சென்னை மக்களுக்கு 265 மி.லி. கூடுதல் குடிநீர் வழங்கும் திட்டம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடக்கி வைத்தார்

சென்னை, செப். 21-

**சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார்.**

சென்னை மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் சென்னை பெருநகருக்கு தற்போது, 1,180 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இதனுடன் கூடுதலாக செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து நாள் ஒன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்படும் என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது.

இதனை தொடங்கி வைப்பதற்காக, தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று பூந்தமல்லிக்கு புறப்பட்டார். அவர், குமணன் சாவடி முதல் திருமழிசை வரை 8 கி.மீ. தொலைவுக்கு மக்களை சந்தித்தபடியே வாகனத்தில் ஊர்வலம் சென்றார். அப்போது, அவருக்கு கட்சி சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அப்போது, பூந்தமல்லியில் கட்சி தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் சாலையோரம் இருந்தபடி அவரை வரவேற்றனர். வாழ்த்து கோஷங்களையும் எழுப்பினர். அவர்களில் சிலர் பூங்கொத்துகளையும், சால்வைகளையும் பரிசாக வழங்கினர். அவற்றை அவர் பெற்று கொண்டார். இதனை தொடர்ந்து, புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அவர் பார்வையிட்டு, அதனை தொடங்கியும் வைத்துள்ளார். இதனால், பொதுமக்கள் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான தரம் வாய்ந்த நீர் கூடுதலாக கிடைக்க பெறும்.

புதிய உச்சத்தில் விலை..!

# மீண்டும் ஒரு சவரன் தங்கம் ரூ.82 ஆயிரத்தை தாண்டியது

சென்னை, செப். 21-

**ஆபரணத் தங்கம் சவரன் ரூ.82 ஆயிரத்தை மீண்டும் கடந்து ஒரு வரலாறு காணாத புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.**

உலக நாடுகள் இடையிலான போர் பதற்றம், பொருளாதார மந்தநிலை, டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற காரணங்களால் தங்கம் விலை தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து வருவதாக கூறப்படுகிறது. அமெரிக்காவின் வர்த்தக போரால் அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சி அடைந்தது. இதனால் பங்குச்சந்தைகளில் முதலீடு குறைந்து, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரித்து வருகிறது.

இந்த சூழலில் தங்கம் விலை கடந்த 16-ந்தேதி ஒரு சவரன் ரூ.82 ஆயிரத்தை தாண்டி இதுவரை இல்லாத வரலாறு காணாத உச்சத்தை தொட்டது. அதன் பிறகும் விலை உயருமோ என நினைத்த நேரத்தில், கடந்த சில நாட்களாக சற்று குறைந்து காணப்பட்டது. நேற்று முன்தினம் நிலவரப்படி, கிராமுக்கு ரூ.10-ம், சவரனுக்கு ரூ.80-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.10 ஆயிரத்து 230-க்கும், ஒரு சவரன் ரூ.81 ஆயிரத்து 840-க்கும் விற்பனையானது. இதன் மூலம் தங்கம் விலை ரூ.82 ஆயிரத்துக்கு கீழ் வந்தது.

இந்நிலையில் நேற்று தங்கம் விலை மீண்டும் உச்சத்தை எட்டி உள்ளது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கம் விலை சவரனுக்கு ரூ.480 உயர்ந்து, ஒரு சவரன் ரூ,82,320-க்கு விற்பனையானது. ஆபரணத்தங்கத்தின் விலை கிராம் ரூ.60 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.10,290-க்கு விற்பனையானது. தங்கம் விலையை போல, வெள்ளி விலையும் நேற்று உயர்ந்து விற்பனையானது.

நேற்று முன்தினம் ஒரு கிராம் ரூ.143-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 43 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் நேற்று வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2-ம், கிலோவுக்கு ரூ.2,000-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.145-க்கும், ஒரு கிலோ ரூ.1 லட்சத்து 45 ஆயிரத்துக்கும் விற்பனையானது.

# நாம் பிற நாடுகளை சார்ந்து இருப்பதுதான் நமக்கு எதிரி

## குஜராத்தில் பிரதமர் மோடி பேச்சு

பவ்நகர், செப். 21-

**குஜராத்தில் ரூ.34,200 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், திட்டங்களை தொடங்கி வைத்தும் உரையாற்றினார். மேலும், உலகில் நமக்கு பெரிய எதிரி யாரும் கிடையாது. நாம் பிற நாடுகளை சார்ந்து இருப்பதே நம்முடைய பெரிய எதிரி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**



குஜராத்தின் பவ்நகரில் பிரதமர் மோடி பல்வேறு வளர்ச்சி பணிகளை தொடங்கி வைப்பதற்காக நேற்று சென்றார். அவர் வாகன பேரணி நடத்திய போது, தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். இதன்பின்னர், சமுத்ரோ சே சம்ரிதி என்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ரூ.34,200 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், திட்டங்களை தொடங்கி வைத்தும் உரையாற்றினார்.

அவர் பேசும்போது, உலகில் நமக்கு பெரிய எதிரி யாரும் கிடையாது. நாம் பிற நாடுகளை சார்ந்து இருப்பதே நம்முடைய பெரிய எதிரி. இந்தியாவின் இந்த எதிரியை, சார்ந்திருக்கும் இந்த எதிரியை நாம் ஒன்றிணைந்து தோற்கடிக்க வேண்டும். இதனை நாம் எப்போதும் வலியுறுத்த வேண்டும் என பேசியுள்ளார். அடுத்த தலைமுறைக்கான நிலையான மற்றும் வளம் வாய்ந்த எதிர்காலம் உறுதி செய்யப்படுவதற்கு, வெளிநாடுகளை பெரிய அளவில் நாம் சார்ந்திருக்க கூடாது என்று அப்போது அவர் வலியுறுத்தினார். உலகின் மிக பெரிய மக்கள் தொகை கொண்ட நாம் ஆத்மநிர்பார் (சுயசார்பு) ஆக மாற வேண்டும். 140 கோடி மக்களின் வேதனைகளுக்கான ஒரேயொரு மருந்து, சுயசார்பு இந்தியா என்பதே ஆகும் என கூறினார்.

சிப்புகள் (அரை கடத்திகள்) முதல் ஷிப்புகள் (கப்பல்கள்) வரை உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட வேண்டும். உலக அளவில் பொருட்களை கொண்டு செல்ல ஆண்டுதோறும் வெளிநாட்டு நிறுவனத்திற்கு ரூ.6 லட்சம் கோடியை இந்தியா கொடுத்து வருகிறது. இது ஏறக்குறைய ராணுவ பட்ஜெட்டுக்கு சமம் என்றும் கூறினார். அதனால், பெரிய கப்பல்களை நாட்டின் உட்கட்டமைப்புகளாக கொண்டு, இந்திய கடல்வழி துறையை பலப்படுத்தும் வரலாற்று முடிவை தன்னுடைய அரசு எடுத்துள்ளது என்றும் அவர் பேசியுள்ளார்.

இந்தியாவிடம் இளைஞர் சக்திக்கு குறைவில்லை. ஆனால், சுதந்திரத்திற்கு பின்னர், இந்தியாவின் அனைத்து சக்திகளையும் காங்கிரஸ் புறந்தள்ளி விட்டது. கோடிக்கணக்கான மதிப்பில் ஊழல்கள் நடந்துள்ளன. காங்கிரஸ் அரசின் கொள்கைகளால், நாட்டின் இளைஞர்களுக்கு பெரிய அளவில் தீங்கு ஏற்பட்டு உள்ளது என்றும் அவர் பேசியுள்ளார்.

மறக்கமுடியாத அனுபவங்கள் கொண்டதாக இருந்தது:

# ஐரோப்பிய பயணம் தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம்

சென்னை, செப். 21-

**பல மறக்கமுடியாத அனுபவங்கள் கொண்டதாக தனது ஐரோப்பிய பயணம் இருந்ததாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.**

ஐரோப்பிய பயணம் மேற்கொண்டது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் தெரிவித்து இருப்பதாவது; எனது வெளிநாட்டு பயணங்கள், புதிய திட்டங்கள், அரசியல் கேள்விகள் என, மக்களுடன் ஸ்டாலின் ஆப்-ல் கேள்விகள் வந்துள்ளன. அதற்கான பதில்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

கேள்வி: வெளிநாட்டு பயண அனுபவங்கள், தொழில் முதலீட்டாளர்களிடம் தமிழ்நாடு பற்றிய பார்வை எப்படி?

பதில்: தமிழ்நாட்டில் கட்டமைப்புகளை எப்படி உருவாக்கியுள்ளோம். படித்த இளைஞர்கள் உள்ளனர். அவர்களின் திறமை என்ன என்பதை ஜெர்மனியில் முதலீட்டாளர்களை சந்தித்து விவரித்தோம். அதை கேட்ட அவர்கள், தமிழ்நாட்டை பற்றி வியந்து பேசினர். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் ஆர்வமாக உள்ளனர். இந்த மாற்றம், வளர்ச்சியை அடுத்த கட்டத்துக்கு கொண்டு செல்வதற்கான தொலைநோக்கு திட்டங்களை செயல்படுத்தி வருகிறோம்.

கேள்வி: ஆக்ஸ்போர்டு பற்றியும், வெளிநாடு வாழ் தமிழர்களை சந்தித்தது பற்றியும் கூற முடியுமா?

பதில்: ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பல்வேறு நாடுகளிலிருந்து வந்திருந்த பேராசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் பெரியார் சிலையை திறந்துவைத்து, அவர்கள் முன் பெரியார் பற்றி பேசுகையில் மெய்சிலிர்த்தது. ஜெர்மனி, லண்டனில் தமிழர்களை சந்திக்கும்போது அவர்கள் கூறும்போது, முதல் தலைமுறை பட்டதாரிகளின் கல்வி கட்டணத்தை கலைஞர் ரத்து செய்ததுதான் நான் இந்த அளவுக்கு இருப்பதற்கு காரணம் என்றனர். லண்டனில் உயர் கல்வி படிக்கும் மாணவர்கள், திராவிட மாடல் அரசு கொண்டுவந்த முழு உதவித்தொகை மூலம் இங்கே இருப்பதாக கூறினார்கள்.

இதுபோல் பல மறக்கமுடியாத அனுபவங்கள் கொண்டதாக எனது ஐரோப்பிய பயணம் இருந்தது. அங்கு பொது மக்கள் பொது இடங்களில் சுய ஒழுக்கத்தை கடைபிடிப்பதை கவனித்தேன். இந்த பொறுப்புணர்வு இங்கேயும் வர வேண்டும் என விருப்பப்படுகிறேன். இவ்வாறு அந்த பதிவு இருந்தது.

# தமிழ் பாடத்தில் 100 மதிப்பெண்கள் எடுத்தால் ரூ.10,000 ஊக்கத்தொகை

## அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு

சென்னை, செப். 21-

**பொதுத் தேர்வில் தமிழில் 100 மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களுக்கு ரூ.10,000 ஊக்கத்தொகை வழங்கப்படும் என பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார்.**

சென்னையில் பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் அன்பில் மகேஸ் கூறியதாவது: "பள்ளிக்கல்வித் துறை தன்னுடைய இலக்கை தாண்டி உழைத்து வருகிறது. பள்ளிக்கல்வித் துறை கட்டடங்கள் சாதியை ஒழிக்கும் கட்டடங்கள்..அன்புக் கரங்கள் மூலம் பல சிறப்பான திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்படுகின்றன. 2,715 பட்டதாரி ஆசிரியர்கள் எங்களது பள்ளிக்கல்வித் துறை குடும்பத்தில் இணைந்துள்ளனர். கல்வி, சுகாதாரத்தை இரு கண்களாக கருதி முதல் அமைச்சர் செயல்படுத்தி வருகிறார்.

பொதுத் தேர்வில் தமிழில் 100 மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களுக்கு ரூ.10,000 ஊக்கத்தொகை வழங்கப்படும்.ஆசிரியர்களே 6 மாதத்தில் உங்களுக்கு பொதுத் தேர்வு வந்துவிடும். எங்களுக்கு பொதுத் தேர்தல் வந்துவிடும். நீங்களும் வெற்றி பெற வேண்டும், நாங்களும் வெற்றி பெற வேண்டும். நான் அரசியல் பேசவில்லை. அறிவு சார்ந்த விஷயத்தை கொண்டு செல்வதற்காகவே இங்கு பேசுகிறேன்" என்றார்.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -387.73 | -96.55 |
| பாயிண்ட் 82,626.23 | பாயிண்ட் 25,327.05 |

**தங்கம்** 1 சவரன் ₹82,320 · 1 கிராம் ₹10,290

**வெள்ளி** 1 கிலோ ₹145,000 · 1 கிராம் ₹145.00

**டாலர்** ₹88.09

**பெட்ரோல்** ₹100.75 · **டீசல்** ₹92.34

## காசாவில் தீவிரமடையும் போர்:
# இஸ்ரேலுக்கு மேலும் ஆயுதங்களை வழங்க ட்ரம்ப் நிர்வாகம் ஒப்புதல்..!

**வாஷிங்டன், செப். 21-**

காசாவில் தீவிரமடையும் போரை தொடர்ந்து இஸ்ரேலுக்கு கோடிக்கணக்கான மதிப்பிலான ஆயுதங்களை ட்ரம்ப் நிர்வாகம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

இஸ்ரேல் மீது கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் 7-ந்தேதி ஹமாஸ் அமைப்பு கொடூர தாக்குதல் நடத்தியது. இதில், ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டதுடன், நூற்றுக்கணக்கானோர் பணய கைதிகளாக சிறை பிடித்து செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து காசாவுக்கு எதிராக இஸ்ரேல் போரில் இறங்கியது.



21 மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில், காசா பகுதியில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தும் உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். எனினும், நாங்கள் பயங்கரவாதிகளையே இலக்காக கொண்டு தாக்குதல் நடத்துகிறோம் என இஸ்ரேல் கூறுவதுடன், மக்கள் அடர்த்தியான பகுதிகளில் ஹமாஸ் அமைப்பினர் செயல்படுகின்றனர் என்றும் அதனால், பொதுமக்களின் உயிரிழப்புகள் ஏற்படுகின்றன என்றும் குற்றச்சாட்டாக கூறியுள்ளது.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் நிர்வாகம், ரூ.56 ஆயிரத்து 378 கோடி மதிப்பிலான ஆயுதங்கள் மற்றும் சாதனங்களை இஸ்ரேலுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் 30, ஏ.எச்.-64 அபாசே ரக தாக்குதல் ஹெலிகாப்டர்கள், 3,250 கவச வாகனங்கள் மற்றும் ரூ.6 ஆயிரத்து 606 கோடி மதிப்பிலான உதிரி பாகங்கள் ஆகியவை வழங்கப்படும்.

காசா நகரில் ஹமாஸ் அமைப்பின் இலக்குகளை குண்டு வீசி தகர்க்கும் கடுமையான தாக்குதலில் இஸ்ரேல் ராணுவம் ஈடுபட்டு வருகிறது. இந்த தாக்குதல் நேற்று முன்தினமும் தொடர்ந்தது. எண்ணற்ற புலம் பெயர்ந்த பாலஸ்தீனியர்கள், தங்களால் தப்பி செல்ல முடியாத நிலை காணப்படுகிறது என கூறி வருகின்றனர். இந்த சூழலில், இஸ்ரேலின் தாக்குதலை தீவிரப்படுத்தும் வகையில் இந்த ஒப்புதல் அமையும் என கூறப்படுகிறது. அமெரிக்காவின் நியூயார்க் நகரில் அடுத்த வாரம் ஐ.நா. பொது சபையின் ஆண்டு கூட்டம் நடைபெற உள்ளது. இதில், காசா விவகாரம் பற்றி உயர்மட்ட கூட்டம் நடைபெறும். இந்நிலையில், ட்ரம்ப் நிர்வாகத்தின் இந்த ஒப்புதல் பற்றிய தகவல் வெளி வந்துள்ளது.

## ஆப்கானிஸ்தானில் மீண்டும்
# அமெரிக்க படைகளை குவிக்க ட்ரம்ப் திட்டம்

**வாஷிங்டன், செப். 21-**

ஆப்கானிஸ்தானில் மீண்டும் அமெரிக்க படைகளை குவிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

கடந்த 2001-ம் ஆண்டு, அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் உள்ளிட்ட கட்டடங்களை அல்கொய்தா பயங்கரவாதிகள் விமானத்தால் மோதி தகர்த்தனர். அதற்கு பதிலடியாக அல்கொய்தாவுக்கு அடைக்கலம் அளித்து வந்த ஆப்கானிஸ்தானில் உள்ள தலிபான்கள் மீது அமெரிக்க படைகள் தாக்குதல் நடத்தின.

பின்னர், ஆப்கானிஸ்தானில் அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு பதவியேற்றது. அங்கேயே அமெரிக்க படைகள் முகாமிட்டன. இதற்கிடையே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், முதல்முறையாக ஜனாதிபதியாக இருந்த போது, ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

2021-ம் ஆண்டு, ஜோ பைடன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது, ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வெளியேறின. அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு கவிழ்ந்தது. தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றினர். தலிபான்கள் ஆட்சி கெடுபிடியாக இருக்கும் என்று கருதிய ஆப்கன் மக்கள் ஏராளமானோர் விமானங்கள் மூலம் நாட்டை விட்டு தப்பி ஓடினர். கடைசி அமெரிக்க விமானம் வெளியேறியபோது, காபூல் விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான ஆப்கன் மக்கள் குவிந்தனர்.

இதற்கிடையே, 4 ஆண்டுகளுக்கு பிறகு, ஆப்கானிஸ்தானில் உள்ள பக்ராம் விமான தளத்தில் மீண்டும் அமெரிக்க படைகளை குவிக்க ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார். லண்டனில், இங்கிலாந்து பிரதமர் கெயிர் ஸ்டார்மருடன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது, ட்ரம்ப் இத்தகவலை தெரிவித்தார். ''நாங்கள் அமெரிக்க படைகளை மீண்டும் அங்கு அனுப்பி வைக்க முயன்று வருகிறோம்'' என்று அவர் கூறினார்.

மக்ராம் விமான தளம், சீனாவுக்கு அருகில் இருக்கிறது. எனவே, சீனாவுக்கு பதிலடியாக அங்கு அமெரிக்க படைகள் இருப்பது அவசியம் என்று ட்ரம்ப் கருதுகிறார். இதுதொடர்பாக ட்ரம்ப் நிருபர்களிடம் கூறியதாவது:-

மக்ராம் விமான தளம், உலகிலேயே மிகவும் வலிமையானது. அங்கு எதை வேண்டுமானாலும் நிறுத்தலாம். மேலும், அந்த விமான தளம் சீனாவுக்கு அருகில் உள்ளது. சீனா அணு ஆயுதங்களை தயாரிக்கும் இடத்தில் இருந்து ஒரு மணி நேர பயணத்தில் இருக்கிறது. அத்தகைய இடத்தை ஜோ பைடன் விட்டுக்கொடுத்திருக்கக்கூடாது. அவர் முற்றிலும் தகுதியற்றவர். தலிபான்களுக்கு எங்களிடம் இருந்து நிறைய தேவைப்படுகிறது. எனவே, அந்த விமான தளத்தை திரும்பப்பெற முயன்று வருகிறோம். இவ்வாறு அவர் கூறினார்.

## மும்பையில் இருந்து
# தாய்லாந்து சென்ற விமானத்திற்கு நடுவானில் வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, செப். 21-**

தாய்லாந்துக்கு சென்று கொண்டு இருந்த விமானத்துக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

மும்பையில் இருந்து 182 பயணிகளுடன் தாய்லாந்துக்கு இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது. நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்தபோது மும்பை விமான நிலையத்திற்கு மர்ம நபர் ஒருவர் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு அந்த விமானத்தின் கழிவறைக்குள் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் மறைத்து வைத்திருப்பதாகவும், விமானம் நடுவானில் வெடித்து சிதற இருப்பதாகவும் கூறிவிட்டு இணைப்பை துண்டித்துள்ளார்.

இதனையடுத்து மும்பை விமான நிலைய அதிகாரிகள் உடனடியாக இண்டிகோ விமானத்தின் விமானியை தொடர்பு கொண்டு வெடிகுண்டு மிரட்டல் குறித்து தெரிவித்தனர். இதனையடுத்து அவ்விமானி விமானத்தை அவசர அவசரமாக சென்னை விமான நிலையத்தில் தரையிறக்கினார்.

விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் அவசரமாக கீழே இறக்கப்பட்டு விமான நிலைய ஓய்வறைகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து சென்னை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள், வெடிகுண்டு நிபுணர்கள், அதிரடி படையினர், அந்த விமானத்தை சூழ்ந்து சோதனைகள் நடத்தினர்.

சோதனையில் விமானத்திற்குள் சந்தேகப்படும் படியான எந்தப் பொருளும் இல்லாததால் இது வழக்கமான புரளி என்று கூறப்படுகிறது. ஆனாலும் தொடர்ந்து விமானத்தில் சோதனைகள் நடந்து வருகிறது.

விமானம் முழுமையாக பரிசோதித்த பின்பு, சென்னையில் இருந்து தாய்லாந்து நாட்டுக்கு புறப்பட்டு செல்லும் என்று கூறப்படுகிறது. விமானத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்த மர்ம நபர் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்தால் சென்னை விமான நிலையத்தில் பரபரப்பு ஏற்பட்டது.

# நைஜீரியாவில் தீ விபத்து: 10 பேர் பலி

**அபுஜா, செப். 21-**

நைஜீரியாவில் வணிக வளாகத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 10 பேர் உயிரிழந்தனர்.

ஆப்பிரிக்க நாடான நைஜீரியாவின் வணிக தலைநகரம் லாகோஸ். அங்குள்ள அடுக்குமாடி கட்டிடத்தில் ஆப்ரி லேண்ட் டவர் என்ற வணிக வளாகம் அமைந்துள்ளது. இந்த வணிக வளாகத்தின் 4-வது மாடியில் திடீரென தீப்பிடித்தது. மளமளவென கட்டிடத்தின் மற்ற பகுதிகளுக்கும் தீ வேகமாக பரவியது. இதனால் அந்த இடம் முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சி அளித்தன.

எனவே அங்கிருந்தவர்களுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டது. இதனையடுத்து வணிக வளாகத்தின் கண்ணாடியை உடைத்துக்கொண்டு பலரும் தப்பிக்க முயன்றனர். இதில் பலருக்கு கை, கால்கள் முறிந்தன. இதற்கிடையே தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் அங்கு சென்றதும் தண்ணீரை பீய்ச்சியடித்தனர். அவர்களின் பல மணி நேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. மற்றொருபுறம் வணிக வளாகத்தில் சிக்கியவர்களை மீட்கும் பணியும் துரிதப்படுத்தப்பட்டது. எனினும் இந்த தீ விபத்தில் 10 பேர் உடல் கருகி பலியாகினர். மேலும் 25 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது.

## எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல:
# சவுதி அரேபியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து பாக்., விளக்கம்

**இஸ்லாமாபாத், செப். 21-**

சவுதி அரேபியா உடனான பாதுகாப்பு ஒப்பந்தம் குறிப்பிட்ட எந்த நாட்டுக்கும் எதிரானது அல்ல என்று பாகிஸ்தான் வெளியுறவு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் ஷவுகத் அலி, செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:- ரியாத் நகரில் கடந்த 17-ம் தேதி பாகிஸ்தானுக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையே வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. இதில், பாகிஸ்தான் சார்பில் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பும் சவூதி அரேபியா சார்பில் அதன் பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மானும் கையெழுத்திட்டனர். எந்த ஒரு நாட்டுக்கு எதிரான எந்த ஒரு ஆக்கிரமிப்பும் இருவருக்கும் எதிரான ஆக்கிரமிப்பாகக் கருதப்படும் என்று இந்த ஒப்பந்தம் கூறுகிறது. இது தற்காப்புக்கானது மட்டுமே. வேறு எந்த ஒரு நாட்டுக்கும் எதிரானது அல்ல. வேறு எந்த ஒரு நாட்டுக்கும் எதிராக இது தாக்கங்களை ஏற்படுத்தாது.

இரு நாடுகளின் தலைமையும் இரு தரப்பு உறவுகளை புதிய உச்சத்துக்குக் கொண்டு செல்வதில் உறுதியாக உள்ளன. இஸ்லாத்தின் புனித தலங்களைக் கொண்ட சவுதி அரேபியா உடனான பாகிஸ்தானின் உறவு என்பது பல பத்தாண்டுகளாக இருக்கக்கூடியது. பகிரப்பட்ட நம்பிக்கை, மூலோபாய நலன்கள், பொருளாதார சார்பு ஆகியற்றில் இந்த உறவு வேரூன்றியுள்ளது. சவூதி அரேபியாவில் உள்ள இரண்டு புனித மசூதிகள் மீது பாகிஸ்தான் மக்கள் ஆழமான நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். பாகிஸ்தானும் சவூதி அரேபியாவும் சகோதரத்துவம் மற்றும் ஒத்துழைப்பின் தனித்துவமான பிணைப்பைக் கொண்டுள்ளன என பாகிஸ்தான் வெளியுறவு அலுவலக செய்தித் தொடர்பாளர் ஷவுகத் அலி தெரிவித்துள்ளார்.

## கரடி நடமாட்டம் எதிரொலி: பழைய குற்றாலத்தில் குளிக்கும் நேரம் குறைப்பு


**தென்காசி, செப். 21-**

கரடி நடமாட்டம் அதிகரிப்பால் பழைய குற்றாலத்தில் சுற்றுலாப்பயணிகள் குளிக்கும் நேரம் குறைக்கப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டத்தில் உள்ள பழைய குற்றாலம் பகுதியில் கரடி நடமாட்டம் அதிகரித்துள்ளது. தனியார் விடுதிகள் அருகே சாலையில் எவ்வித பயமும் இன்றி கரடி உலாவிய காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகின. எனவே வனவிலங்குகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் பழைய குற்றாலம் அருவியில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு நேரக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து வனத்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தென்காசி வனக்கோட்டம் குற்றாலம் காப்புக் காட்டில் அமைந்துள்ள பழைய குற்றாலம் அருவி பகுதியில் இரவு நேரங்களில் யானைகள், கரடிகள், மிளா உள்பட பல அரிய வகை விலங்குகள் குடிநீர் தேவைக்காக உலா வருகின்றன. பழைய குற்றாலம் செல்லும் சாலை வழியாக மாலை நேரங்களில் கடந்த சில நாட்களாக ஒற்றை கரடி பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது. எனவே சுற்றுலா பயணிகளின் நலன் கருதி பாதுகாப்பை உறுதி செய்யும் விதமாக இனிமேல் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை மட்டுமே பழைய குற்றாலம் அருவியில் குளிக்க அனுமதிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**21-09-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** இன்றைய செயல்பாடுகள் அனைத்திலும் தொய்வு உண்டாகும். எதிர்பார்த்த அரசு உதவிகள் மற்றும் வங்கிக் கடன்கள் மிகுந்த பிரயாசைக்குப் பிறகு கிடைக்கும். குழந்தைகளுக்கு உடல் உபாதைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்:-** தாய் சொல்லைத் தட்டாதீர். அவரின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. பணிவுத்தன்மை இல்லையெனில் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். தொழிலில் கொடுக்கல் வாங்கல் ஓரளவே சிறப்பாக அமையும்.

**மிதுனம்:-** சிங்கம் போல ஸ்டெரங்ந்த் எனக்கு என தைரியம் கூடும். மனதில் தெம்பு, தெளிவும் நிலைத்திருக்கும். பொதுநல வாழ்க்கையில், சூழ்நிலைகளில் மாற்றம் ஏற்படலாம். பயணங்களில் ஆர்வம் ஏற்படும்.

**கடகம்:-** மனைவி, குழந்தைகள் ஆரோக்கியக் குறைவு மருத்துவச் செலவை தரும். எடுத்த காரியங்கள் தோல்வி அடைவதைக் கண்டு துவண்டு விடாதீர்கள். தோல்வியே வெற்றிக்கு முதல் படி ஆகும்.

**சிம்மம்:-** எதிர்பாராத இடங்களிலிருந்து பல வழிகளிலும் பணவரவு ஏற்படும். தொழிலில் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். பெரியவர்கள், நண்பர்கள் சந்திப்பில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

**கன்னி:-** இடமாற்றங்கள் ஏற்படலாம். பெண்களால் ஏற்படும் வரவுக்கு மிஞ்சிய செலவுகள் மூலம் பணமுடை ஏற்படும். கோபத்தைக் குறைத்தால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**துலாம்:-** பெற்றோர்களால் நன்மை ஏற்படும். குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலவும். சிலருக்கு குழந்தைப் பிறப்புக்கான வாய்ப்பு உருவாகும். உல்லாசப் பயணங்கள் மூலம் சந்தோஷம் நிலவும்.

**விருச்சிகம்:-** சந்தோஷ அனுபவங்கள் கூடும். குழந்தைகளின் திறமை கண்டு மகிழ்ச்சி ஏற்படும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்கும். தீர்த்த யாத்திரைகள் திருப்தி தரும்.

**தனுசு:-** தெய்வீக சிந்தனைகள் அதிகரிப்பதன் காரணமாக குடும்பத்துடன் வேண்டுதல்களை நிறைவேற்ற முயல்வீர்கள். வாழ்க்கையில் பல நல்ல திருப்பங்களை எதிர்பார்க்கலாம்.

**மகரம்:-** மனதில் ஒரு நிம்மதி அற்ற நிலை இருக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் இருக்காது. மனைவியின் வாய் துடுக்கு மற்றவர்களுடன் பகை ஏற்படும்.

**கும்பம்:-** ஆரோக்கிய நிலை மேம்படும். தொழில் புரிபவர்களுக்கு பேச்சே மூலதனமாய் அமையும். வாழ்க்கையில் முக்கிய திருப்பங்கள் ஏற்படும். சிலர் காதல் வயப்பட நேரும்.

**மீனம்:-** தனவரவு கூடும். திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். கல்வியில் சிறப்பு அடைவர். நண்பர்களால் உதவி உண்டு. சொந்த வீடு, நிலம் அமையும். பிறருக்கு உதவும் எண்ணம் மேலோங்கும்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2715 புதிய ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சி கையேட்டினை வெளியிட்டு, ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியினை தொடங்கி வைத்தார்.

# ‘சென்னை குடிநீர்’ செயலியை முதல்வர் தொடங்கி வைத்தார்

**சென்னை, செப். 21-**

சென்னையில் குடிநீர் செயலியை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

சென்னைக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கூடவே, குடிநீர் தொடர்பான பொதுமக்களின் குறைகள் மற்றும் புகார்களை விரைவாக நிவர்த்தி செய்ய “சென்னை குடிநீர் செயலி” என்ற புதிய செல்போன் செயலியினை மக்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார். இச்செயலியை சென்னை குடிநீர் வாரியம் வடிவமைத்துள்ளது.

திருவள்ளூர் மாவட்டம் செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து, நாளொன்றுக்கு கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து குடிநீர் தேவைக்கு ஏற்பவும், பெருகிவரும் சென்னை மாநகரின் மக்கள் தொகையை கருத்தில் கொண்டும், ஏரியின் நீர் இருப்பை கருத்தில் கொண்டும், செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து ஏற்கனவே தினசரி வழங்கி வந்த 265 மில்லியன் லிட்டர் குடிநீருடன், கூடுதலாக இத்திட்டத்தின் மூலம் 265 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்குவதால் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும். இதன்மூலம் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சி, குன்றத்தூர் மற்றும் திருபெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள 20 இலட்சம் பொது மக்கள் பயன் பெறுவர்.

மேலும், பொதுமக்களின் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்ய அனைத்து துறைகளிலும் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், சென்னை குடிநீர் வாரியம், பொதுமக்களின் குறைகள் மற்றும் புகார்களை விரைவாக நிவர்த்தி செய்ய “சென்னை குடிநீர் செயலி” என்ற புதிய செல்போன் செயலியினை வடிவமைத்து மக்களின் பயன்பாட்டிற்காக தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.

புகைப்படங்களுடன் கூடிய பதிவு செய்யும் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலி மூலம், பொதுமக்களால் பதிவு செய்யப்படும் புகார்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்ட புவியியல் தகவல் அமைப்பின் மூலம் தானாகவே கணினி வழியாகப் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட உதவி பொறியாளருக்கு குறுஞ்செய்தி மற்றும் வாட்ஸ்அப் வாயிலாக அனுப்பப்படும்.

மேலும், புகார் பதிவு செய்த நபருக்கு உடனடியாக உறுதிப்படுத்தல் குறுஞ்செய்தியும் அனுப்பப்படும். இச்செயலியின் முக்கிய சிறப்பம்சமாக புகாரின் நிலை குறித்து பொதுமக்கள் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம். மேலும், புகார்களை இணையதளம், மின்னஞ்சல், 8144930308 என்ற வாட்ஸ்அப் எண்ணிலும் பேஸ்புக், எக்ஸ் தளம் போன்ற சமூக வலைதளங்கள் மற்றும் கியூ ஆர் கோடு மூலமும் பதிவு செய்யலாம். பொதுமக்களின் வசதிக்காக இச்செயலி தமிழ் மற்றும் ஆங்கிலத்திலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சென்னை குடிநீர் செயலியினை, ஆண்ட்ராய்டு மற்றும் ஐஓஎஸ் மொபைல் சாதனங்களில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். இப்புகார்கள் அனைத்தும் சென்னை குடிநீர் செயலியில் ஒருங்கிணைக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த நிகழ்ச்சியில், தமிழக நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ. கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

**மரம் மனிதனின் உரம்**

## கஞ்சா விற்காத இடங்களே இல்லை:
# எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு



**நாமக்கல், செப். 21-**

தமிழகத்தில் கஞ்சா விற்காத இடங்களே இல்லை என்று எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டாக கூறினார்.

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதற்காக, கட்சிகள் கூட்டணி அமைப்பது, வாக்காளர்களை கவரும் வகையில் பிரசாரத்தில் ஈடுபடுவது உள்ளிட்ட தீவிர அரசியல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இதில், தி.மு.க. சார்பாக, ஓரணியில் தமிழகம் என்ற முழக்கத்துடன் மக்களை நேரிடையாக சந்தித்து, பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அ.தி.மு.க. சார்பாக, மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற முழக்கத்துடன் அக்கட்சியின் பொதுச்செயலாளர் மற்றும் சட்டசபை எதிர்க்கட்சி தலைவரான எடப்பாடி பழனிசாமி, தொகுதி வாரியாக மக்களை சந்தித்து வருகிறார்.

இதன்படி, நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் தொகுதியில் நேற்று முன்தினம் நடந்த பிரசாரத்தில் எடப்பாடி பழனிசாமி கலந்து கொண்டு பேசினார். அவர் பேசும்போது, தி.மு.க. அரசு ஆட்சியில் 67 சதவீதம் மின் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. மதுரையில் மேயர் கணவர் கைது செய்யப்பட்டுள்ளார். காஞ்சீபுரம், திருநெல்வேலி மேயர்களுக்கும், கவுன்சிலருக்கும் சண்டை இருந்து வருகிறது என்றார். தமிழகத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துவிட்டது. கஞ்சா சாக்லேட் வந்து விட்டது. ஆம்லெட்டில் கூட கஞ்சா ஆம்லெட் வந்து விட்டது என கூறுகிறார்கள். தமிழகம் போதைப் பொருள் விற்பனையால் சீரழிந்து கிடக்கிறது.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற ஓராண்டில் இதுபற்றி சட்டசபையில் நான் பல முறை பேசினேன். ஆனால், அவற்றை எல்லாம் அப்போது கண்டுகொள்ளாத முதல்-அமைச்சர் இப்போது தாமதமாக விழித்து கொண்டு இருக்கிறார். மூன்றரை ஆண்டுகள் கழித்து இளைஞர்களே போதையின் பாதையில் செல்லாதீர்கள் என்று ஞானம் பிறந்தது போன்று உரையாற்றுகிறார். இப்படிப்பட்ட தாமதமாக விழித்து கொள்ளும் முதல்-அமைச்சர் நமக்கு தேவையா?’ என்று ஆவேசத்துடன் பேசினார்.

தமிழகம் முழுவதும் கஞ்சா விற்பனை நடந்து வருகிறது. அது உண்மை தானே... என பொதுமக்களை நோக்கி கேட்டார். தொடர்ந்து அவர், கிராமம் முதல் நகரம் வரை கஞ்சா விற்காத இடங்களே இல்லை என்ற அளவில் அது அதிகரித்து காணப்படுகிறது. மாணவர்கள், இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் கஞ்சாவை உபயோகித்து சீரழியும் நிலை காணப்படுகிறது என்றும் அவர் குற்றச்சாட்டாக கூறினார்.

### சாலை விபத்தில் ஆசிரியை பலி:

# குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிதி; முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு

**விழுப்புரம், செப். 21-**

விழுப்புரத்தில் நடைபெற்ற சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். மேலும் அவரது குடும்பத்திற்கு ரூ.3 லட்சம் நிவாரணம் அறிவித்துள்ளார்.



விழுப்புரத்தில் நடந்த சாலை விபத்தில் ஆசிரியை ஒருவர் உயிரிழந்தார். அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டு இருப்பதாவது:-

சென்னையில் நேற்று (20.9.2025) நடைபெற்ற ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியில் கலந்து கொள்வதற்காக நான்கு அரசுப் பள்ளி ஆசிரியைகள் தங்கள் கணவர்களுடன் சென்னைக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது அவர்களின் கார் லாரி மீது மோதி விபத்துக்குள்ளாது. இதில் ஆசிரியை உட்பட இருவர் உயிரிழந்த செய்தியைக் கேட்டு மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். மேலும், இந்த விபத்தில் காயமடைந்து முண்டியம் பாக்கம் அரசு விழுப்புரம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் ஆறு பேருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா மூன்று இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தலைநகர் டெல்லியில்

# பல்வேறு பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**புதுடெல்லி, செப். 21-**

டெல்லியில் பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதை தொடர்ந்து மாணவர்கள் பத்திரமாக வெளியேற்றப்பட்டனர்.

டெல்லியில் கடந்த சில நாட்களாக ஏராளமான பள்ளிகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் வந்தது. இதனையடுத்து, போலீசார் சோதனை நடத்திய போது மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது. இந்நிலையில், நேற்ற பிரபல பள்ளிகளுக்கு தொலைபேசி மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது. டி.பி.எஸ். துவாரகா, கிருஷ்ணா மாடல் பள்ளி, சர்வோதயா வித்யாலயா உள்ளிட்ட பிரபல பள்ளிகளும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டது.

ஒரே நேரத்தில் பல பள்ளிகளுக்கு விடுக்கப்பட்ட இந்த மிரட்டலால் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தரப்பில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. வெடிகுண்டு மிரட்டலை தொடர்ந்து பள்ளிகளில் உள்ள மாணவர்கள் பாதுகாப்புடன் வளாகத்தில் இருந்து வெளியே அனுப்பப்பட்டனர்.

தகவலறிந்த போலீசார், வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்களுடன் மோப்ப நாய் உதவியுடன் சம்பந்தப்பட்ட பள்ளிகளில் தீவிர சோதனை நடத்தினர்.

இந்த சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்தது. இது குறித்து வழக்குப்பதிவு செய்த போலீசார், மிரட்டல் விடுத்தது யார் என்பது குறித்த விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இந்திய ராணுவத்தில் பள்ளி மாணவர்கள் சேர வேண்டும்

### முப்படை தலைமை தளபதி அழைப்பு

**ராஞ்சி, செப். 21-**

பள்ளி மாணவர்கள் ராணுவத்தில் சேர வேண்டும் என்று முப்படை தலைமை தளபதி அனில் சவுகான் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் உள்ள கவர்னர் மாளிகையில், முப்படை தலைமை தளபதி அனில் சவுகான், 36 பள்ளிக்கூடங்களை சேர்ந்த மாணவர்களுடன் உரையாடும் நிகழ்ச்சி நடந்தது. அப்போது மாணவர்களிடம் அனில் சவுகான் கூறியதாவது:-



ஆபரேஷன் சிந்தூர் ஒரு "புதிய வகையான போரை" முன்னறிவித்தது. மேலும் தாக்குதலின்போது பாகிஸ்தானை தோற்கடிப்பதை உறுதி செய்தது. பள்ளி மாணவர்கள் ராணுவத்தில் சேர வேண்டும். நாட்டுக்கு சேவை செய்ய மட்டுமல்ல, வேறு யாரும் உலகத்தை பார்க்க முடியாத வழிகளில் காண்பதற்காக ராணுவத்தில் சேர வேண்டும்.

கடமை வாழ்க்கை, ஒழுக்கம், ஒப்பற்ற சாகசம் ஆகியவை நிறைந்த வாழ்க்கையை அனுபவியுங்கள். செல்போன் திரைகளை பார்ப்பதை கைவிட்டு, டிஜிட்டல் உலகத்துக்கு அப்பால், பணம் கொடுத்தாலும் வாங்க முடியாத அனுபவங்களை பெறுங்கள். நாட்டின் பல பகுதிகளுக்கு சாகச பயணம் மேற்கொள்ளுங்கள்.

ராணுவத்தில் நாங்கள் போரிட மட்டும் கற்றுத்தருவது இல்லை. நாட்டையும், அதன் மக்களையும், நிலப்பரப்பையும் கற்றுத்தருகிறோம்.

ஆகவே, இந்தியாவை உண்மையாக அறிந்து கொள்ள சீருடை அணியுங்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# அமெரிக்கா எச்.1 பி விசா விவகாரம்: பிரதமர் மோடி மீது ராகுல் விமர்சனம்

**புதுடெல்லி, செப். 21-**

எச்.1 பி விசா விவகாரத்தை சுட்டிக்காட்டி பிரதமர் மோடி மீது ராகுல் காந்தி விமர்சனம் செய்துள்ளார்.

இந்திய தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் ஊழியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில், அமெரிக்கா, எச்-1பி விசா கட்டணத்தை கடுமையாக உயர்த்தியிருக்கிறது. இது தொடர்பாக காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் நாடாளுமன்ற எம்.பியுமான ராகுல் காந்தி, மோடியை சாடியுள்ளார்.

கடந்த 2017ஆம் ஆண்டு, ராகுல் தன்னுடைய எக்ஸ் பக்கத்தில் இந்தியாவுக்கு மிகவும் பலவீனமான பிரதமர் இருக்கிறார் என்று பதிவிட்டிருந்தார்.

அந்த பதிவையும், தற்போது அமெரிக்காவில் எச்-1பி விசா கட்டணத்தை உயர்த்தியதன் செய்தியையும் இணைத்து, ராகுல் காந்தி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில் ராகுல் காந்தி கூறியிருப்பதாவது: - நான் மீண்டும் சொல்கிறேன், இந்தியாவில் பலவீனமான பிரதமர் இருக்கிறார்" என்று கூறியுள்ளார்.

# மைசூரில் தசராவை தொடங்கி வைத்த எழுத்தாளருக்கு எதிரான மனு தள்ளுபடி

**புதுடெல்லி, செப். 21-**

மைசூரு தசராவை தொடங்கி வைக்க எழுத்தாளர் பானு முஷ்டாக் அழைக்கப்பட்டதை எதிர்த்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி செய்துள்ளது.

சுப்ரீம் கோர்ட்டில் எச்.எஸ். கவுரவ் என்பவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவில், "சாமுண்டீஸ்வரி கோவிலில் மைசூரு தசரா விழாவை தொடங்கி வைப்பவர் இந்துவாக இருக்க வேண்டும். ஆனால், இவ்விழாவை தொடங்கிவைக்க அழைக்கப்பட்டுள்ள எழுத்தாளர் பானு முஷ்டாக் முஸ்லிம் என்பதால் இந்து மத பூஜைகளைச் செய்ய முடியாது. இது மரபை மீறுவதாகும். இதனால் இந்துக்களின் உணர்வுகள் புண்படும்" என்று தெரிவித்துள்ளார்.



இந்த மேல்முறையீட்டு மனுவை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா ஆகியோர் அமர்வு நேற்று முன்தினம் விசாரித்தது. அப்போது நீதிபதிகள், அரசமைப்பு சாசன முகப்புரை என்ன சொல்கிறது? அரசு நடத்தும் விழாவில் எப்படி பாகுபாடு இருக்க முடியும்? என்று கேட்டனர்.

மனுதாரர் தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல், கோவிலுக்குள் நடக்கும் பூஜை மத சார்பற்றதாகி விடாது. பூஜை என்பது மைசூர் தசரா விழாவின் ஒரு பகுதியாகும். விழாவுக்கு அழைக்கப்படும் நபர் எங்கள் மதத்துக்கு எதிராக கருத்து தெரிவித்துள்ளார். இது போன்ற சூழலில் அவரை அழைக்க முடியாது என வாதிட்டார்.

அவரது வாதத்தை நிராகரித்த நீதிபதிகள், மைசூரு தசராவை தொடங்கி வைக்க புக்கர் பரிசு பெற்ற எழுத்தாளர் பானு முஷ்டாக் அழைக்கப்பட்டதை எதிர்த்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# மும்பையில் மோனோ ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தம்

**மும்பை, செப். 21-**

மும்பையில் மோனோ ரெயில் சேவை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே மும்பையில்தான் செம்பூர் - சந்த் கட்கே மகாராஜ் சவுக் (சாத் ரஸ்தா) இடையே 19.74 கி.மீ.க்கு மோனோ ரெயில் சேவை இயக்கப்பட்டு வருகிறது. இந்த ரெயில் சேவை தொழில்நுட்ப கோளாறு காரணமாக பழுதாகி நடுவழியில் நிற்பது தொடர் கதையாகி வருகிறது. கடந்த மாதம் 19-ந் தேதி பலத்த மழையின் போது மைசூர்காலனி அருகில் மோனோ ரெயில் பழுதாகி அந்தரத்தில் நின்றது.

அப்போது ரெயிலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் தானியங்கி கதவுகளை திறக்க முடியவில்லை. இதனால் அதில் சிக்கிய 582 பயணிகள் நீண்ட போராட்டத்துக்கு பிறகு கதவுகள் மற்றும் ஜன்னல் கண்ணாடிகளை உடைத்து பத்திரமாக மீட்கப்பட்டனர்.

அதேபோல, கடந்த 15-ந் தேதி வடலா பகுதியில் அண்டாப்ஹில் பஸ் டெப்போ - ஜி.டி.பி.என். நிலையம் இடையே மோனோ ரெயில் ஒன்று சென்று கொண்டு இருந்தது. திடீரென தொழில்நுட்ப கோளாறு காரணமாக ரெயில் நடுவழியில் அந்தரத்தில் நின்றது. இதனால் அதில் இருந்த பயணிகள் அதிர்ச்சியில் உறைந்தனர். நடுவழியில் ரெயில் அந்தரத்தில் நின்றதால் செய்வது அறியாது திகைத்தனர்.

இதையடுத்து, பயணிகளை மீட்பதற்காக மற்றொரு மோனோ ரெயில் வரவழைக்கப்பட்டது. அந்த ரெயில் பழுதாகி நின்ற மோனோ ரெயில் அருகில் நிறுத்தப்பட்டது. இரு ரெயில்களின் வாசல்களுக்கும் இடையே பலகை மூலம் பாதை உருவாக்கப்பட்டு, பயணிகள் மீட்பு ரெயிலில் பத்திரமாக ஏற்றப்பட்டனர். பின்னர் அவர்கள் அருகில் உள்ள ரெயில் நிலையத்தில் இறக்கிவிடப்பட்டனர்.

இந்த நிலையில், மோனோ ரெயிலில் ஏற்படும் தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்யும் நோக்கில், அதன் சேவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நீண்டகால நம்பகத்தன்மையை உறுதி செய்வதற்காகவும் செம்பூரில் இருந்து சாத் ரஸ்தா வரையிலான 19.54 கி.மீ தூர மோனோ ரெயில் சேவை நேற்று முதல் குறைந்தது இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் என மராட்டிய அரசு தெரிவித்துள்ளது.

மோனோ ரெயில் சேவை நிறுத்தப்பட்டதால் மாற்று போக்குவரத்தைத் தேர்வு செய்ய வேண்டிய கட்டாயம் பயணிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

### தேர்தல் ஆணையம் ரத்து செய்த

# 42 தமிழக கட்சிகள் எவை..?

**டெல்லி, செப். 21-**

தேர்தல் ஆணையம் ரத்து செய்த 42 தமிழக கட்சிகள் எவை என்ற விவரம் வெளியாகியுள்ளது.

நாடு முழுதும் தேர்தல்களில் போட்டியிடாத, தேர்தல் கணக்கை தாக்கல் செய்யாத 474 அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை தேர்தல் ஆணையம் ரத்து செய்துள்ளது.

இதில், தமிழகத்தை சேர்ந்த 42 அரசியல் கட்சிகளும் அடங்கும். அதன் விவரம் வருமாறு:-

1.கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி (ஈஸ்வரன்), 2.மனிதநேய மக்கள் கட்சி (ஜவாஹிருல்லா), 3.மனிதநேய ஜனநாயக கட்சி (தமிமுன் அன்சாரி) 4.தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் (ஜான் பாண்டியன்), 5.எழுச்சி தேசம் கட்சி, 6.கோகுல மக்கள் கட்சி, 7.பெருந்தலைவர் மக்கள் கட்சி (என்.ஆர்.தனபாலன்), 8.தமிழர் தேசிய முன்னணி, 9.தமிழ்நாடு மக்கள் உரிமைக் கட்சி, 10.விடுதலை மக்கள் முன்னேற்ற கழகம், 11.திரிணாமுல் தமிழ்நாடு காங்கிரஸ், 12.தமிழ்நாடு தெலுங்கு மக்கள் கட்சி, 13.தமிழர் முன்னேற்றக் கழகம், 14.தொழிலாளர் கட்சி, 15.உரிமை மீட்பு கழகம், 16.வலிமை வளர்ச்சி இந்தியர்கள் கட்சி,17.விஜய பாரத மக்கள் கட்சி, 18.அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி, 19.அகில இந்திய பார்வர்டு பிளாக், 20.அகில இந்திய மக்கள் நகர்வு கட்சி, 21.அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகம், 22.அகில இந்திய பசும்பொன் முன்னேற்ற கழகம், 23.அகில இந்திய சத்யஜோதி கட்சி, 24.அனைத்திந்திய தமிழக முன்னேற்ற கழகம், 25.அண்ணா மக்கள் இயக்கம், 26.அனைத்து இந்திய தொழிலாளர் கட்சி, 27.அண்ணன் தமிழக எழுச்சி கழகம், 28.டாக்டர் அம்பேத்கர் மக்கள் புரட்சி இயக்கம், 29.எழுச்சி தேசம் கட்சி, 30.இந்திய காதலர்கள் கட்சி, 30.இந்திய மக்கள் கல்வி முன்னேற்ற கழகம், 31.மகாத்மா காந்தி தேசிய தொழிலாளர் கட்சி, 32.மக்கள் தேசிய கட்சி, 33.மக்கள் கூட்டமைப்பு கட்சி, 34.மக்களாட்சி முன்னேற்ற கழகம், 35.பச்சை தமிழகம் கட்சி, 36.சமத்துவ மக்கள் கழகம், 37.சிறுபான்மை மக்கள் நல கட்சி, 38.சூப்பர் தேசிய கட்சி, 39.சூப்பர் ஸ்டார்ஸ் மக்கள் கழகம், 40.தமிழக மக்கள் திராவிட முன்னேற்ற கழகம், 41.தமிழக மக்கள் முன்னேற்ற கழகம், 42.தமிழர் தேசிய முன்னணி ஆகிய கட்சிகள்.

### பயணிகள் தவறவிட்ட பொருட்களை மீட்டு

# மீண்டும் ஒப்படைக்க சென்னை மெட்ரோ அலுவலகம் திறப்பு

**சென்னை, செப். 21-**

பயணிகள் தவறவிட்ட பொருட்களை மீட்டு பொருட்களை மீண்டும் ஒப்படைக்க சென்னையில் மெட்ரோ அலுவலகம் திறக்கப்பட்டது.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், பயணிகள் அனைவரும் தங்களின் பொருட்களை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டுமென அறிவுறுத்துகிறது. அப்படி ஏதேனும் பொருட்களை தவறவிட்டால், அதற்கு சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் பொறுப்பேற்காது. எனினும், பயணத்தின் போது ஏதேனும் பொருட்கள் தவறவிட்டு மீட்கப்பட்டால், அவை தொடர்புடைய நிலையம் மூலமாகவோ அல்லது "இழந்த மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பொருட்கள் அலுவலகம் மூலமாகவோ பெற முடியும்.

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் இயக்குநர் மனோஜ் கோயல், (அமைப்புகள் மற்றும் இயக்கம்), புரட்சித்தலைவர் எம்.ஜி.ராமசந்திரன் சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் "இழந்த மற்றும் மீட்டெடுக்கப்பட்ட பொருட்கள் அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இதுவரை, தனித்தனி மெட்ரோ நிலையங்கள் வாயிலாக பயணிகளுக்கு இழந்த பொருட்கள் மீட்டு தரப்பட்டது. இதுவரை சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் எடுத்துக்கொண்ட சிறப்பு முயற்சிகளின் மூலம், 74% இழந்த பொருட்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு திருப்பி வழங்கப்பட்டுள்ளன. இப்போது இந்த அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளதால், பயணிகள் நேரடியாக சென்ட்ரல் மெட்ரோ நிலையத்தில் உள்ள இந்த அலுவலகத்தை அணுகி தங்களின் இழந்த பொருட்களை எளிதில் பெற்றுக்கொள்ள முடியும். இந்த முயற்சி பயணிகள் வசதியை பெரிதும் மேம்படுத்தி, சிறந்த அணுகல் வசதி மற்றும் தடையற்ற அனுபவத்தை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இழந்த பொருட்கள் தொடர்பான கேள்விகளுக்கு தொடர்பு கொள்ள: மின்னஞ்சல்: LFO@cmrl.in இணையதளம்: https://chennaimetrorail.org/lost-and-found-enquiry சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் நம்பகமான பயணத்தை வழங்க உறுதி மேற்கொண்டுள்ளது.

### ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டம்:

# மத்திய அரசு ஊழியர்களுக்கு அறிவுறுத்தல்

**புதுடெல்லி, செப். 21-**

மத்திய அரசு ஊழியர்கள் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்துக்கு மாறுவதற்கான இறுதி தேதி அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இருக்கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை கடந்த ஏப்ரல் 1-ந் தேதி முதல் மத்திய அரசு அறிமுகம் செய்தது. இந்த திட்டத்தை தேர்வு செய்வதற்கு வருகிற 30-ந்தேதி வரை அவகாசம் வழங்கப்பட்டது.

எனவே இந்த காலக்கெடு முடிவதற்குள் ஊழியர்கள் அந்த திட்டத்தை தேர்வு செய்யுமாறு மத்திய நிதி அமைச்சகம் அறிவித்து உள்ளது.

கடைசி நேர நெருக்கடியை தவிர்ப்பதற்காக 30-ந் தேதிக்கு முன்னதாகவே திட்டத்தை தேர்வு செய்யவும், அவர்களின் கோரிக்கை சரியான நேரத்தில் செயலாக்குவதை உறுதி செய்யவும் கேட்டுக்கொண்டு உள்ளது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை சேர்ந்த ஊழியர்கள் இந்த தேதிக்குப்பிறகு ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை கோர முடியாது என்றும் கூறியுள்ளது.

பல்வேறு காரணங்களால் ஒருங்கிணைந்த ஓய்வூதிய திட்டத்தை ஆன்லைன் வழியாக தேர்வு செய்ய முடியாதவர்கள், மேற்படி காலக்கெடுவுக்குள் தங்களுக்கு சம்பந்தப்பட்ட பொறுப்பு அலுவலகத்தில் முறையாக நிரப்பப்பட்ட விண்ணப்ப படிவத்தை நேரடியாக சமர்ப்பிக்கலாம் என்றும் நிதியமைச்சகத்தின் அறிவிப்பில் கூறப்பட்டு உள்ளது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

### மாணவர்களின் விவரங்களை வரும் 20-ம் தேதிக்குள்

# எமிஸ் தளத்தில் பதிவு செய்ய தமிழக பள்ளிக் கல்வித்துறை அறிவுறுத்தல்

**சென்னை, செப். 21-**

மாணவர்களின் விவரங்களை விரைவில் எமிஸ் தளத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது.

உயர்கல்வி வழிகாட்டி திட்டத்தின் கீழ் 2025-26-ம் கல்வியாண்டில் அனைத்து அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் 9-ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்வி தொடர்பாக பல்வேறு முன்னெடுப்புகளை பள்ளிக்கல்வித்துறை மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையில் மாணவர்களுக்கு உயர்கல்வி சார்ந்து வழிகாட்டுதல்கள் வழங்குவதற்கும், உயர்கல்வி சேர்க்கையினை உறுதி செய்யும் வகையிலும் சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய மாணவர்கள் சார்ந்த விவரங்களை பள்ளிக்கல்வித்துறையின் எமிஸ் தளத்தில் பதிவு செய்ய அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது.

இதுதொடர்பாக பள்ளிக் கல்வித்துறை சார்பில், அனைத்து பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-

மாவட்டங்களில் ஆசிரியர்கள் பதிவிடக்கூடிய தகவல்களின் அடிப்படையில் மட்டுமே இனிவரும் நாட்களில், சிறப்பு கவனம் செலுத்த வேண்டிய மாணவர்களின் உயர்கல்வி சார்ந்த வழிகாட்டுதல்கள் மற்றும் உயர்கல்வி சேர்க்கையினை உறுதிசெய்ய வழிவகுக்கும். ஆகவே வகுப்பு ஆசிரியர்கள் தங்கள் வகுப்பு மாணவர்களின் விவரங்களை முழுமையாக பதிவு செய்வதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும். அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் மாணவர்களின் விவரங்களை எமிஸ் தளத்தில் அடுத்த மாதம் (அக்டோபர்) 20-ந் தேதிக்குள் பதிவேற்றம் செய்யப்படுவதை பள்ளி தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திடவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# சபரிமலை ஐயப்பன் கோவில் சீரமைப்பு ரூ.1,000 கோடியில் செயல்படுத்தப்படும்: கேரள முதல்வர் பினராயி விஜயன் தகவல்

**திருவனந்தபுரம், செப். 21-**

சபரிமலை ஐயப்பன் கோவில் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

கேரள அரசும் திருவிதாங்கூர் தேவஸ்தானமும் இணைந்து நடத்தும் சர்வதேச ஐயப்ப பக்தர்கள் சங்கமம் நிகழ்ச்சி பம்பையில் நேற்று காலை தொடங்கியது. முதல்வர் பினராயி விஜயன் சங்கமத்தை தொடங்கி வைத்தார். இதில், தமிழக அமைச்சர்கள் சேகர் பாபு, பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பேசிய முதல்வர் பினராயி விஜயன், "காலம் மாறிக்கொண்டே இருக்கிறது. சபரிமலைக்கு வரும் பக்தர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப நாம் சிந்திக்க வேண்டும். இதைக் கருத்தில் கொண்டே 2011-12ம் ஆண்டில் சபரிமலை மாஸ்டர் பிளான் தொடங்கப்பட்டது. மேம்பாட்டுத் திட்டங்களுக்காக ரூ.148.5 கோடி செலவிடப்பட்டுள்ளது. ஆனால், இந்த திட்டத்தை தடுக்க சிலர் நீதிமன்றத்துக்குச் சென்றனர். இது துரதிருஷ்டவசமானது. ஐயப்பன் மீதான பக்தியா, வனப் பாதுகாப்பு மீதான அக்கறையா, மத தூய்மையா? ஆனால், இவை எதுவும் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும்.

2019ம் ஆண்டு கோவிட் பெருந்தொற்று நெருக்கடியின்போது, தேவசம்போர்டின் தினசரி செயல்பாடு கூட நெருக்கடியில் இருந்தது. அந்த நேரத்தில், அரசாங்கம், வாரியத்துக்கு ரூ.140 கோடி நிதி உதவியை வழங்கியது. மேலும், புதுப்பித்தல் பணிக்காக ரூ.123 கோடியை வழங்கியது. சபரிமலையின் அடிப்படை முகாமாக உள்ள நிலக்கல்லின் மேம்பாட்டுத் திட்டத்துக்கு 2020ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. கடந்த ஜனவரியில் சன்னிதானம் மற்றும் பம்பா ஆகிய இரண்டுக்குமான மலையேற்றப் பாதைகளை மேம்படுத்த அரசாங்கம் ஒப்புதல் வழங்கியது.

சபரிமலை மாஸ்டர் பிளான் என்பது சன்னிதானம், பம்பா, பாரம்பரிய பாதைகள், நிலக்கல் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை மையமாகக் கொண்டது. 2050-க்கும் இந்த திட்டங்கள் நிறைவடையும். சன்னிதான மேம்பாட்டுக்காக முதல் கட்டமாக 2022-27-க்குள் ரூ.600.47 கோடியும், இரண்டாம் கட்டமாக 2028-33-க்குள் ரூ.100.02 கோடியும், மூன்றாம் கட்டமாக 20234-39-க்குள் ரூ.77.68 கோடியும் ஒதுக்கப்படும். பம்பாவைப் பொறுத்தவரை, ரூ.207.97 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். மலையேற்றப் பாதையை மேம்படுத்த ரூ.47.97 கோடி ஒதுக்கப்பட இருக்கிறது. ஒட்டுமொத்தமாக சன்னிதானம், பம்பா மற்றும் மலையேற்றப் பாதைகள் ஆகியவற்றின் மேம்பாட்டுக்காக ரூ.1,033.62 செலவிடப்பட இருக்கிறது.


எதிர்வரும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் சட்டப்பேரவைத் தேர்தலை கருத்தில் கொண்டே இந்துக்களின் வாக்குகளை ஈர்க்கும் நோக்கில் இந்த சங்கமம் நிகழ்ச்சி நடத்தப்படுவதாக காங்கிரஸ், பாஜக உள்ளிட்ட கட்சிகள் கூறுவது தவறு. இது ஏற்கனவே திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி. அதேபோல், இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு சிறுபான்மையினருக்கான நிகழ்ச்சி ஒன்றை கேரள அரசு நடத்தும் என்று கூறுவதும் உண்மையல்ல. சிறுபான்மையினருக்கான நிகழ்ச்சிகள் துறைசார்ந்த முறையில் நடத்தப்படும். ஆனால், வேண்டுமென்றே சிலர், தவறான தகவல்களைப் பரப்புவதற்காக அவ்வாறு கூறுகின்றனர்" என தெரிவித்தார்.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



என்னுடைய முதல் அரசியல் எதிரி சாதிதான். நீங்கள் எங்கிருந்தாலும் வாழ்க. ஆனால் சாதியுடன் வாழ வேண்டாம். சிறு வயதில் அதிகம் சாமி கும்பிட்டு இருக்கிறேன். அதற்காக நான் யாரையும் அவமதிக்கவில்லை. கோவிலாக இருந்தாலும், கட்சியாக இருந்தாலும் சரி எங்கு உண்டியல் வைத்தாலும் அது பிரச்னைதான்.

- கமல்ஹாசன்



தமிழ்நாட்டில் பா.ஜ.க.வுக்கு ஒரு எம்.பி. கூட இல்லை. எம்.பி. இல்லையென்றால் என்ன, அதுவும் பாரத நாட்டின் ஒரு பங்குதான், அங்கும் சிறப்பாக நாம் செயல்பட வேண்டும் என நினைத்து பிரதமர் மோடி பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாடு மீது பிரதமருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகம் உள்ளது.

- நிர்மலா சீதாராமன்



2024 மக்களவைத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பிரதமர் மோடி வாக்குத் திருட்டில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பாக எல்லோருடைய சந்தேகங்களையும் தீர்க்கும் வகையில் ஒரு ஹைட்ரஜன் குண்டை விரைவில் வெளிப்படுத்துவேன். அந்த ஆதாரம் இப்போதுள்ள நிலைமையின் யதார்த்தத்தை முற்றிலுமாக சிதைக்கும்.

- ராகுல் காந்தி



கனிம சுரங்கம் அமைக்கும் விவகாரத்தில் சுற்றுச்சூழல் சம்மந்தமான குறிப்பாணை பற்றி பாராளுமன்றம் மற்றும் மாநில சட்டமன்றங்களில் விவாதிக்கப்பட வேண்டும். அதுவரை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் அலுவலக குறிப்பாணையை உடனே ரத்து செய்து பொதுமக்கள், இயற்கை வளங்களை பாதுகாக்க வேண்டும்.

- ராமதாஸ்

# தஞ்சாவூர் மாவட்டம் நீலகிரி தெற்குத் தோட்டம் கிராமத்தில் சமூக நீதி விடுதி அமைச்சர்கள் கோவி.செழியன், சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தனர்



தஞ்சாவூர்,செப்.21-

தஞ்சாவூர் மாவட்டம், நீலகிரி தெற்குத் தோட்டம் கிராமம், புதிய வீட்டுவசதி வாரியம், முல்லை நகர் தற்காலிக கட்டடத்தில் மாணவியர்களுக்கான சமூக நீதி விடுதியினை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் (20.09.2025) திறந்து வைத்தார்கள்.

கலெக்டர் பா.பிரியங்கா பங்கஜம், தலைமை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிற்கிணங்க, 2025-2026 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் 100 மாணவிகள் பயன்பெறும் வகையில் புதிதாக சமூக நீதி விடுதி (கல்லூரி மாணவியர்) துவங்கிட அறிவிப்பு வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்களுக்கு தஞ்சாவூர் சமூக நீதி விடுதி (கல்லூரி மாணவியர்) துவங்கிட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாணவிகளின் நலனை கருத்திற் கொண்டு தஞ்சாவூர், புதுக்கோட்டை, கள்ளக்குறிச்சி, திருவள்ளூர் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் புதிய விடுதிகள் துவங்கிட ஆணையிடப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் தலா 100 கல்லூரி மாணவியர்கள் வீதம் 500 மாணவிகள் தங்கி கல்வி பயில இயலும். இவ்விடுதிகளுக்கு 5 பட்டதாரி போதக காப்பாளினிகள், 10 சமையலர்கள், 5 காவலர் ஏவலர்கள் மற்றும் 5 துப்புரவு பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்படும் 4 சமூகநீதி கல்லூரி மாணவியர் விடுதிகளில் 528 மாணவிகள் தங்கி பயின்று வருகின்றனர். ஆண்டுதோறும் குந்தவை நாச்சியார் மகளிர் கலைக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலும் மாணவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சமூகநீதி விடுதிகளின் தேவை அதிகரித்து வருகிறது.

அந்தவகையில் தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், நீலகிரி தெற்குத் தோட்டம் கிராமம், புதிய வீட்டுவசதி வாரியம், முல்லை நகரில் வாடகை கட்டிடத்தில் 100 மாணவிகள் பயன்பெறும் வகையில் சமூக நீதி விடுதி பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் மாணவிகள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் , பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் சிறுபான்மையினர் நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை, சலவை பெட்டி போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி.ப.நித்யா , மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் ஸ்ரீதர் , வட்டாட்சியர் சிவகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் புதிய பள்ளி வகுப்பறைக் கட்டிடங்கள்

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்



புதுக்கோட்டை,செப்.21-

தமிழ்நாடு முதலமைச்சர் (20.09.2025) சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில்; பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்; 243 புதிய பள்ளிக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி, ரூ.94 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடங்களை திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ;, கலெக்டர் மு.அருணா, தலைமையில் கலந்துகொண்டார்.

பின்னர் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மாணாக்கர்களின் கல்வி நலனில் மிகுந்த அக்கறை கொண்டு பல்வேறு கல்வி சார்ந்த திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டில் கல்வி நிலையங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்தி, தமிழக மாணவ, மாணவிகளின் கல்வியினை மேம்படுத்திடும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும் பள்ளிக்கல்வித்துறையில் புரட்சியை ஏற்படுத்திடும் வகையில் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கும் திட்டங்களான முதலமைச்சரின் காலை உணவு திட்டம், எண்ணும் எழுத்தும், இல்லம் தேடி கல்வி, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற பல்வேறு வரலாற்று முன்னெடுப்புகளை நிறைவேற்றி வருகிறார்கள்.

அதன்படி, சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில்; பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில்; பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் தமிழ்ப் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 142 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத்தொகைக்கான காசோலைகளை வழங்கி, ரூ.94 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் கொல்லிமலை கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.277 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள 243 பள்ளிக் கட்டடங்கள் மற்றும் பாரத சாரண சாரணியர் புதிய தலைமை அலுவலகம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி, ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2,715 புதிய ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியினை தொடங்கி வைத்தார்கள்.

அதனடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் காணொலிக்காட்சி வாயிலாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் புல்வயல், ஒடுகம்பட்டி, கீரையூர், மாங்காடு ஆகிய இடங்களில் புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், மாங்காடு அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இன்றையதினம் கலந்து கொள்ளப்பட்டது.

இப்பள்ளியில் புதிய 18 வகுப்பறை கட்டடங்கள் ரூ.384.48 லட்சம் மதிப்பீட்டில் 3 தளங்கள் தலா 5.80 ச.அ பரப்பளவில் என மொத்தம் 15.240 ச.அ பரப்பளவில் எழிலுற கட்டப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மாணவர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எனவே, தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் கல்வி திட்டங்களை மாணாக்கர்கள் அனைவரும் உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டு கல்வியில் சிறந்து விளங்கிட வேண்டும் எனவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் கூ.சண்முகம், ஆலங்குடி வட்டாட்சியர் பி.வில்லியம்மோசஸ், உதவி செயற்பொறியாளர் பாலமுருகன், மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் முனைவர்.மெ.சி. சாலை செந்தில், தலைமையாசிரியர் முருகன், அரசு ஒப்பந்தகாரர் இளையராஜா மற்றும் ஜானகி செல்வராஜன், கே. எஸ்.இரவிக்குமார,; மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழுவினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்

## கரூர் மாவட்டத்தில் கலெக்டர் மீ.தங்கவேல் பங்கேற்பு



கரூர்,செப்.21-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் (20.09.2025) சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் காணொலிக் காட்சி வாயிலாக முடிவுற்ற பணிகள் மற்றும் புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்கள். அதனைத் தொடர்ந்து கரூர் மாவட்டத்தில் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் ஜெகதாபி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி முன்னிலை வகித்தார்.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், ஜெகதாபி அரசு மேல்நிலைப் பள்ளியில் நபார்டு திட்டத்தின் கீழ் 10 வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 2.12 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டது.

குளித்தலை வட்டம், கீழ வெளியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 1.48 கோடி மதிப்பீட்டிலும், செங்குளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 4 வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் கழிப்பறைகள் ரூ. 1.19 கோடி மதிப்பீட்டிலும், இராச்சாண்டார் திருமலை அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் 10 வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 2.47 கோடி மதிப்பீட்டிலும், அரவக்குறிச்சி வட்டம், ஈசநத்தம் அரசு மேல்நிலைப் பள்ளியில் 8 வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 1.98 கோடி மதிப்பீட்டிலும், கிருஷ்ணராயபுரம் வட்டம், தம்மாநாயக்கன் பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 2 வகுப்பறை கட்டிடங்கள் ரூ.49.48 இலட்சம் மதிப்பீட்டிலும் முடிவுற்ற மற்றும் புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இதனைத் தொடர்ந்து கரூர் மாவட்டம், ஜெகதாபி அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 10 வகுப்பறை கட்டிடங்கள் ரூ. 2.12 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியில் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி கலந்து கொண்டார்கள். இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் ஊராட்சிகள் சரவணன், மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) தி.திருநாவுக்கரசு மற்றும் வட்டாட்சியர் குமரேசன், வட்டார வளர்ச்சி அலுவலர் வினோத் குமார், தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# எடப்பாடி பழனிசாமி கரூர் வருகை விளம்பரத்திற்கும் கூட்டத்திற்கும் அனுமதி மறுப்பு

## முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆவேசம்



கரூர்,செப்.21-

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி கரூர் வருகையை முன்னிட்;டு விளம்பரத்திற்கும் கூட்டத்திற்கும் காவல்துறை அனுமதி மறுத்ததால் முன்னாள் அமைச்சர் கரூர் மாவட்ட செயலாளர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் ஆவேசமாக பத்திரக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார்

அவர் அளித்த பேட்டி கூறியதாவது வருகின்ற 25,26ம் தேதி கரூர் மாவட்டத்திற்கு முன்னாள் முதல்வர் கழக பொதுசெயலாளர் எடப்பாடி பழனிசாமி மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற நோக்கத்தோடு எழச்சி பயணத்தை மேற்கொள்ள உள்ளார் அதன் காரணமாக சுவர் விளம்பரம் செய்யும் பணியை தொடங்கினோம் ஆனால் திமுகவினர் அதனை தடுத்து நிறுத்தி அராஜகத்தில் ஈடுபட்டனர் முன்பே வேலாயுதம்பாளையத்தில் பணியை தொடங்க இருந்தபோது திமுகவினர் தடுத்ததால் அங்குள்ள காவல் ஆய்வாளர் எஸ்.பி.யிடம் கூறிவிட்டோம் 17ந் தேதி திமுக நிகழ்ச்சி முடிந்தவுடன் 18ந் தேதி உங்கள் விளம்பரங்களை செய்து கொள்ளலாம் என்று கூறினார் அதனை தொடர்ந்து எஸ்.பி.யிடம் மனு அளித்து இதனை உறுதி செய்து கொண்டோம் ஆனால் 19ம் தேதி அன்று சுவர் விளம்பரம் செய்ய கரூர் பைபாஸ் ரவுண்டானாவிற்கு சென்றோம் அதை திமுகவினர் குறுக்கிட்டு தடுத்து அராஜகத்தில் ஈடுபட்டனர் திமுகவினர் விளம்பரம் 17ந் தேதியுடன் முடிந்த நிலையில் அடுத்த வருடம்2026 மார்ச் 1ந் தேதி பிறந்தநாள் விளம்பரம் செய்ய வேண்டும் என்று கூறுகின்றனர் அடுத்த வருடத்திற்கு இப்போதே விளம்பரம் செய்வது எந்த விதத்திலும் நியாயமில்லை அரசாங்க சுவர் என்ன திமுகவிற்கு பட்டா போட்டு கொடுத்துள்ளதா என்று கேள்வி எழுப்பினார் காவல்துறையினர் அனுமதி பெற்று விளம்பரம் செய்யுங்கள் என்கின்றனர் திமுகவினர் அனுமதி பெற்று தான் விளம்பரம் செய்தார்களா என்று மேலும் கேள்வி எழுப்பினர் காவல்துறை சொன்னதை கேட்டு 17ந் தேதி வரை காத்திருந்தோம் அதன் பிறகும் மறுப்பு தெரிவித்தால் என்ன ஆட்சி நடக்கிறது என்று தெரியவில்லை வைத்ததுதான் சட்டம் என்ற இழிவான அரசியலை செய்து வருகின்றனர் கரூரை சுற்றி உள்ள அனைத்து இடத்திலும் திமுகவின் விளம்பரமே உள்ளது தொடர்ந்து ஆட்சியில் இருப்பார்கள் என்று எண்ணுகின்றனர் அதிமுக 31 வருடம் தமிழகத்தை ஆண்ட இயக்கம் மீண்டும் ஆட்சிக்கு வரும் எடப்பாடி பழனிசாமி முதல்வர் ஆவார் அப்பொழுது திமுகவினர்களுக்கு தக்க பாடம் புகட்டுவோம் என்றார் மேலும் அவர் கூறுகையில் எடப்பாடி பழனிசாமியின் பிரசாரத்திற்கு அனுமதி கேட்டு கடிதம் கொடுத்தோம் இதுவரை பதில் இல்லை இது தொடர்பாக உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளோம் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் செய்யும் இடம் தடை செய்யப்பட்ட இடம் என்று சொல்கிறார்கள் ஆனால் அந்த இடத்தில் திமுகவை சேர்ந்த உதயநிதி ஸ்டாலின் கனிமொழி ஆகியோர் கூட்டம் நடத்தி உள்ளனர் அதற்கான ஆதாரங்கள் எங்களிடம் உள்ளது தமிழகத்திலேயே கரூர் மாவட்டத்திற்கு மற்றும் தனி சட்டம் போட்டுள்ளனர் திமுக அந்த இடத்தில் கூட்டம் நடத்தி இருந்தால் அங்கு அதிமுகவிற்கும் எஸ்.பி. அனுமதி கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் கூறியுள்ளது எனவே இது சம்மந்தமாக எஸ்.பி.யை நேரில் சந்திக்க உள்ளோம் என்று பத்திரிக்கையாளர்களுக்கு முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் பேட்டி அளித்தார்

# அரிமளம் பெருமாள் கோயிலில் உலக அமைதி வேண்டி நடைபெற்ற விளக்கு பூஜை

புதுக்கோட்டை,செப்.21-

புதுக்கோட்டை மாவட்டம் அரிமளம் சந்தைப்பேட்டை பகுதியில் பழமை வாய்ந்த வடகலை சீனிவாச பெருமாள் கோயில் உள்ளது. புரட்டாசி மாதம் முதல் வெள்ளிக்கிழமை விளக்கு பூஜை நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து மாலை விளக்கு பூஜை தொடங்கியது. இதில் அப்பகுதியைச் சேர்ந்த திரளான பெண்கள் தாம்பூலம், விளக்குகளுடன் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து விழா ஏற்பாட்டாளர்கள் பெண்களுக்கு விளக்கு ஏற்ற எண்ணெய், உள்ளிட்ட பூஜை பொருட்களை வழங்கினர். பின்னர் பல்வேறு ஹோமங்கள் நடத்தப்பட்டு அனைத்து பெண்களும் ஒரே நேரத்தில் விளக்கேற்றி வழிபட்டனர். முன்னதாக பெருமாளுக்கு சிறப்பு அலங்காரம் அபிஷேக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதால் உலகில் அமைதி நிலவி, மழை பெய்து விவசாயம் செழித்து, குடும்பத்தில் உள்ளவர்கள் நோய் நீங்கி, செல்வம் பெருகும் என நம்பப்படுகிறது. இதனால் விளக்கு பூஜையில் அப்பகுதியைச் சேர்ந்த ஏரளான பெண்கள் கலந்துகொண்டு விளக்கேற்றி வழிபாடு செய்தனர். வழிபாடு செய்த பெண்களுக்கு அருட்பிரசாதம் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டன.

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்: கலெக்டர் பொ.ரத்தினசாமி நேரில் பார்வையிட்டார்



அரியலூர்,செப்.21-

அரியலூர் மாவட்டம், செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாமினை கலெக்டர் பொ.இரத்தினசாமி, நேரில் பார்வையிட்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம். இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் என பல்வேறு சிறப்பான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு முழுவதும் நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ சேவை முகாம் 02.08.2025 அன்று காணொளி காட்சி மூலம் துவங்கி வைக்கப்பட்டது.

அதன்படி இன்றையதினம் செந்துறை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் உயர் மருத்துவ முகாமினை கலெக்டர் நேரில் பார்வையிட்டு, பொதுமக்களிடம் மருத்துவ சேவைகள் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார். மேலும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் 01 பயனாளிகளுக்கு தலா ரூ.20,000 திருமண உதவித்தொகை, 01 பயனாளிக்கு ரூ.2,05,000 மதிப்பில் விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகைகளும் மற்றும் மாவட்ட மேலாளர் அலுவலகம் தாட்கோ சார்பில் 04 பயனாளிக்கு கல்வி உதவித்தொகை, 03 பயனாளிகளுக்கு ஓய்வூதியங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 03 நபர்களுக்கு தேசிய அடையாள அட்டை, 04 நபர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டைகளும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் கலெக்டர் பொ.இரத்தினசாமி, வழங்கினார். தொடர்ந்து அரியலூர் மாவட்டத்தினை புகையிலை இல்லா மாவட்டம் ஆக்கிட முன்னெடுப்பு கையெழுத்து இயக்கத்தினை கலெக்டர் கையெழுத்திட்டு துவக்கி வைத்தார்.

எனவே பொதுமக்கள் அனைவரும் இம்மருத்துவ முகாம்களை பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. இம்முகாமில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.மாரிமுத்து, உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.மணிவண்ணன், மாவட்ட நிலை அலுவலர்கள், மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், இதர அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# திருவாரூரில் திமுக மாணவரணி பொறுப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம்

## மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமையில் நடைப்பெற்றது



திருவாரூர்,செப்.21-

திருவாரூரில் திமுக மாணவரணி பொறுப்பாளர்கள் அறிமுகம் மற்றும் ஆலோசனை கூட்டம் நாகை பைபாஸ்சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் மாவட்ட செயலாளர் பூண்டி கலைவாணன் தலைமையில் நடைப்பெற்றது.கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகளிடம் ஒவ்வொருவரும் தேர்தல் காலத்தில் எவ்வாறு கட்சிக்காக பாடுபட வேண்டும்.உழைப்பவர்களும் தகுந்த பதவிகள் வழங்குவது திமுக மட்டும் தான்.கலைஞர் கருணாநிதி முதன் முதலில் தன்னை ஈடுபடுத்தி கொண்டது மாணவரணி மூலம் தான்.ஒரு கட்சியில் உள்ள முக்கிய அணியாக கருதப்படுவது மாணவரணி தான் அந்த அணியில் இடம் பெற்றுள்ள நீங்கள் கட்சி தலைமை கூறுவது போல நன்றாக உழைத்து வரும் 2026 சட்டமன்ற தேர்தலில் 200 இடங்களுக்கு மேல் திமுகவை வெற்றி பெற வைத்து தமிழக முதல்வராக மு.க.ஸ்டாலினை அமர செய்ய வேண்டும் என்று மாவட்ட கழக செயலாளர் பூண்டி கலைவாணன் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் நகர கழக செயலாளர் வாரைபிரகாஷ், மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பகலவன், துணை அமைப்பாளர்கள் நெல்சன்மண்டேலா, சகுந்தலா, மதிமுத்துக்குமார், நுருல் அமீன்,தகவல் தொழில்நுட்ப அணி மாவட்ட அமைப்பாளர் அரவிந்த்,இலக்கிய அணி மாவட்ட அமைப்பாளர் எண் கன்மணி,துணை அமைப்பாளர் ஜாகிர்உசேன் உள்ளிட்ட அனைத்து மாணவரணி நகர, ஒன்றிய,பேரூர் கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# உங்களுடன் ஸ்டாலின் முகாமில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்து ஆணை

## கலெக்டர் மோகனச்சந்திரன் வழங்கினார்



திருவாரூர்,செப்.21-

திருவாரூர் மாவட்டத்தில், உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் அக்டோபர் மாதம் வரை நகர்புறப்பகுதிகளில் 54 முகாம்களும், ஊரகப்பகுதிகளில் 131 முகாம்களும் என மொத்தம் 185 முகாம்கள் நடைபெற்று வருகிறது.இந்த முகாம்களில் நகர்ப்புற பகுதிகளில் 13 அரசுத்துறைகளைச் சார்ந்த 43 சேவைகளும், ஊரகப்பகுதிகளில் 15 துறைகளைச் சார்ந்த 46 சேவைகளும் வழங்கப்படும்.அத்துடன் முகாம்களுக்கு வருகை தரும் பொதுமக்களின் உடல் நலனைப்பேணும் வகையில், மருத்துவ சேவைகளை வழங்க,மருத்துவ முகாம்களும் நடத்தப்படும். உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ்,தன்னார்வலர்கள், ஒவ்வொரு வீட்டிற்கும் நேரடியாகச் சென்று, முகாம் நடைபெறும் நாள்,இடம் குறித்த விவரங்கள்,அங்கு வழங்கப்படவுள்ள பல்வேறு அரசு துறைகளின் திட்டங்கள்,சேவைகளை விவரித்து, அவற்றில் பயனடைவதற்கான தகுதிகள்,தேவைப்படும் ஆவணங்கள் குறித்து தெரிவிப்பதோடு தகவல் கையேட்டினையும்,விண்ணப்பத்தினையும் வழங்கி வருகின்றனர்.

மேலும் முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறத் தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று விண்ணப்பத்தினை அளிக்கலாம்.இம்முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது 45 நாட்களில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.திருவாரூர் ஒன்றியம்,கீழக்காவதுக்குடி ஊராட்சிக்குட்பட்ட சேந்தமங்கலம் கிராம சந்தை கட்டடத்தில் நேற்று நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமினை கலெக்டர் மோகனச்சந்திரன் நேரில் பார்வையிட்டு, வருவாய்துறையின் சார்பில் 4 பயனாளிக்கு சான்றிதழும்,தமிழ்நாடு மின்சாரத்துறையின் சார்பில் 01 பயனாளிக்கு முகாமில் பதிவு செய்யப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் மின் இணைப்பில்,பெயர் மாற்றம் செய்யப்பட்டு, மாற்றத்திற்கான ஆணையினையும் வழங்கினார்

இம்முகாமில்,மின்சாரத்துறை திருவாரூர் வடக்கு பிரிவு இளமின் பொறியாளர் முருகானந்தம் உள்ளிட்ட அனைத்து துறை அரசு அலுவலர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாமில் 411 நபர்களுக்கு பணிநியமன ஆணைகள்

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்



**பெரம்பலூர்,செப்.21-**

பெரம்பலூர் மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையம் மற்றும் தமிழ்நாடு ஊரக/ நகர்புற வாழ்வாதார இயக்கம் (மகளிர் திட்டம்) இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமினை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், கலெக்டர் ந.மிருணாளினி, தலைமையில், பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர்கள் ம.பிரபாகரன் முன்னிலையில் (20.09.2025) சீனிவாசன் கலை அறிவியல் கல்லூரியில் தொடங்கி வைத்தார்கள்.

இம்முகாமை தொடங்கி வைத்து போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களின் நலனை கருத்தில் கொண்டு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். வேலைவாய்ப்பிற்காக நீண்டகாலம் பதிவு செய்து காத்திருப்பவர்களின் நலன் கருதி வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்கள் வேலைநாடுநர்களும் வேலையளிப்பவர்களும் நேரடியாக சந்தித்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரு இணைப்புப்பாலமாக செயல்படுகிறது. மேலும், இம்முகாம்கள் வேலைநாடுநர்கள் அவர்களின் தகுதிகள் மற்றும் திறன்களை அறிந்து அவர்களை தயார் செய்து கொள்ளவும் உதவுகிறது. மேலும், முகாம் நடைபெறும் நாளிலேயே பணி நியமனம் பெற்றவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்படுவது இத்திட்டத்தின் தனி சிறப்பம்சமாகும்.

திறன் குறைபாடு காரணமாக பணி நியமனம் பெற இயலாதவர்கள் முகாம்களிலேயே கண்டறியப்பட்டு, அவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக திறன் எய்தும் பயிற்சிகள் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசு துறைகளில் பணி வாய்ப்பு பெற இளைய சமுதாயத்தினரை போட்டித்தேர்வுகளுக்கு தயார்படுத்தும் பயிற்சி வகுப்புகள் அரசால் நடைபெற்று கொண்டிருக்கிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் ஜுன் 2021 முதல் 20.09.2025 வரை நடத்தப்பட்ட 52 தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்களில் வேலைநாடுநர்கள் கலந்து கொண்டு 5,403 நபர்கள் பணி நியமனம் பெற்று பயனடைந்தனர்.

மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டல் மையங்களால் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவது மட்டுமின்றி தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு உயர்கல்வி, சுய வேலைவாய்ப்பு, திறன்பயிற்சி ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ஆண்டுதோறும் தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் கண்காட்சி கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகிறது.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைவாய்ப்பு முகாமில் 120-க்கும் மேற்பட்ட வேலையளிக்கும் தனியார்துறை நிறுவனங்கள் மற்றும் திறன்பயிற்சி நிறுவனங்கள் கலந்துக்கொண்டுள்ளனர். இந்த வாய்ப்பினை இளைஞர்கள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

இன்றைய முகாமில் 1118 ஆண்களும், 1396 பெண்களும் என மொத்தம் 2,514 நபர்கள் கலந்துகொண்டார்கள். இதில் 193 ஆண்களுக்கும், 218 பெண்களுக்கும் என மொத்தம் 411 நபர்கள்களுக்கு வேலைவாய்புக்கான பணிநியமன ஆணைகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் வழங்கினார். இந்த முகாமில் இரண்டாம் கட்ட தேர்வுக்கு 476 நபர்கள் தேர்வாகியுள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, மகளிர் திட்ட இயக்குநர் ர.கோபாலகிருஷ்ணன், வருவாய் கோட்டாட்சியர் அனிதா, அட்மா தலைவர் வீ.ஜெகதீசன், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் லி.சாகுல் ஹமீது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# திருவாரூர் மாவட்டம் ஆலங்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம்

## கலெக்டர், எம்.எல்.ஏ. பார்வையிட்டனர்



**திருவாரூர்,செப்.21-**

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்திற்குட்பட்ட ஆலங்குடி அரசு மேல் நிலைப் பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்றுவருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி. கே.கலைவாணன் நேரில் பார்வையிட்டு, 18க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கினார்கள்.

தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டின் சட்டமன்ற அறிவிப்பு எண்.33-ன்படி, தமிழகத்தில் மருத்துவ வசதி குறைந்த, சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகள், மருத்துவ வசதி குறைவாக அமைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள் ஃ குடிசைப்பகுதிகள் போன்ற பகுதிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுத்து முகாம் நடத்தப்பட்டுவருகிறது. இம்முகாம்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, எலும்பியல் மருத்துவம், மகப்பேறு மற்றும் பெண்கள் நலன், குழந்தைகள் நலன், இருதய நோய்ப்பிரிவு, மூளை நோய் பிரிவு, தோல் மருத்துவம், பல் மருத்துவம், கண் மருத்துவம், காது, மூக்கு, தொண்டை, இரத்த பரிசோதனைகள், மனநல மருத்துவம், இயன்முறை மருத்துவம், நடமாடும் இலவச டிஜிட்டல் எக்ஸ்ரே வாகனம், கதிரிக்கவியல், சர்க்கரை நோய், ஆயுஸ் மற்றும் சமூக–பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள். தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 40 வயதிற்கு மேற்பட்டவர்களை இலக்காகக் கொண்டு நலம் காக்கும் ஸ்டாலின் உயர்மருத்துவ சேவை முகாம் செயல்பட்டுவருகிறது.

அதனடிப்படையில், திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டத்திற்குட்பட்ட ஆலங்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர்மருத்துவ சேவை முகாம் நடைபெற்றுவருவதை திருவாரூர் கலெக்டர் வ.மோகனச்சந்திரன், , திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் நேரில் பார்வையிட்டு, 18க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி நபர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்கினார்கள்.

இம்முகாம்களில், அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்ஸ்-ரே முதலியவை) காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், மேலும் பதினைந்து துறைகளைச் சார்ந்த நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளும் (பொது மருத்துவம், அறுவை சிகிச்சை, இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது.

இம்முகாமில், திருவாரூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.அசோக், இணை இயக்குநர் (பொறுப்பு) மரு.ஜெயகுமாரி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.கதிரவன், உதவி இயக்குனர் (சுகாதாரம்) பாஸ்கரன், வலங்கைமான் வட்டாட்சியர் ஒம்சிவக்குமார், வலங்கைமான் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரமணி, முரளி உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள், செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தமிழாசிரியருக்கு நற்றமிழ்ப்பாவலர் விருது

**சென்னை, செப்- 21**

வடசென்னையில் இயங்கி வரும் பி ஏ கே பழனிசாமி மேல்நிலைப்பள்ளி தமிழாசிரியர் முனைவர் தண்டபாணிக்கு நற்றமிழ் பாவலர் விருது வழங்கப்பட்டது

வடசென்னை பழைய வண்ணாரப்பேட்டை பி.ஏ.கே.பழனிசாமி மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக பணியாற்றி வருபவர் முனைவர் தண்டபாணி .. இவர் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல்பட்டதாரி தமிழாசிரியராக \ பணியாற்றி வருகிறார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் திருவாசகத்தை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற தண்டபாணி காமராசரின் வாழ்க்கை வரலாற்றை புதுக்கவிதையாகவும் "கவிதை வரலாற்றில் கலைஞர்"!என்னும் நூலையும் வெளியிட்டுள்ளார் கொரோனா பேரிடரின் போது 60க்கும் மேற்பட்டகருத்தரங்குகளில் பங்கேற்று உரையாற்றியுள்ளார். தமிழ்நாட்டு முன்னாள் முதலமைச்சர்கள் ஜெயலலிதா கலைஞர் முதல் தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் துணை முதலமைச்சர் உதயநிதி வரையில் தனது மாணவர்களை இலக்கியபோட்டிகளில் பங்குபெறச் செய்து பல்லாயிரக்கணக்கான பரிசுகளையும், விருதுகளையும்பெறுவதற்கு ஊக்கப்படுத்தியுள்ளார்தமிழாசிரியர் தண்டபாணிக்கு காஞ்சிபுரத்தை சேர்ந்த கிருஷ்ணா அறிவியல் கலைக்கல்லூரி நற்றமிழ் பாவலர் விருது வழங்கி பாராட்டியுள்ளது

# கொலை வழக்கில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது

**சென்னை செப் 21-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், உத்தரவின் பேரில் நீதிமன்ற விசாரணை நிலுவை வழக்குகளில் அதிக முக்கியத்துவம் வழங்கி எதிரிகளுக்கு உரிய நீதிமன்ற தண்டனை பெற்று தந்து, பாதிக்கப்பட்டோருக்கு உரிய நீதி பெற்று தந்திட, 12 காவல் மாவட்டங்களிலும் துணை ஆணையர்களின் மேற்பார்வையில் உதவி ஆணையர்கள், காவல் ஆய்வாளர்கள் நீதிமன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வழக்குகளில் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தலைமறைவு குற்றவாளிகளை கைது செய்திட, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, கடந்த 2018 ம் ஆண்டு தேனாம்பேட்டை பகுதியில் மதன்குமார் என்பவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் தொடர்புடைய சுரேஷ் (எ) அந்தமான் சுரேஷ் உட்பட 11 பேர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். பின்னர் நீதிமன்ற பிணையில் சென்ற எதிரி சுரேஷ் (எ) அந்தமான் சுரேஷ் அல்லிக்குளம், 20வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ச்சியாக ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் சுரேஷ் (எ) அந்தமான் சுரேஷ் என்பவர் மீது கடந்த மாதம் 7 ந் தேதி அன்று பிடியாணை பிறப்பித்து நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது. தேனாபேட்டை காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி சுரேஷ் (எ) அந்தமான் சுரேஷ், என்பவரை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட எதிரி சுரேஷ் (எ) அந்தமான் சுரேஷ் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

# வாலிபரிடம் கத்தி முனையில் இருசக்கர வாகனத்துடன் பணத்தை பறித்த இருவர் கைது

**சென்னை செப் 21-**

சென்னை, இராயப்பேட்டை, வி.எம் தெருவில் வசித்து வரும் கார்த்தி, என்பவர் கடந்த 17. ந்தேதி அன்று இரவு, ஐஸ்அவுஸ், டாக்டர் பெசன்ட் ரோட்டில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த தெரிந்த நபர்களான ஹரிஷ், ராஜேஷ் உட்பட 3 பேர் சேர்ந்து, மேற்படி கார்த்தியை வழிமறித்து பணம் கேட்டு கையாலும், கத்தியாலும் தாக்கி, அவர் சட்டைப்பையில் வைத்திருந்த பணம் ரூ.2,000/-ஐ பறித்துக் கொண்டு, கார்த்திக்கின் இருசக்கர வாகனத்தையும் பறித்துக் கொண்டு, மூவரும் தப்பிச் சென்றனர். இது குறித்து கார்த்தி, ஐஸ்அவுஸ் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஐஸ்அவுஸ் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் 1.ஹரிஷ், 2.ராஜேஷ், ஆகிய 2 பேர் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து புகார்தாரரின் இருசக்கர வாகனம் மீட்கப்பட்டு, குற்ற செயலுக்கு பயன்படுத்திய 1 கத்தி பறிமுதல் செய்யப்பட்டது.விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி ஹரிஷ் என்பவர் ஐஸ்அவுஸ் காவல் நிலைய சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதும், இவர் மீது ஏற்கனவே கொலைமுயற்சி, கஞ்சா, வழிப்பறி, திருட்டு உட்பட 19 குற்ற வழக்குகள் உள்ளதும், எதிரி ராஜேஷ் மீது கொலைமுயற்சி, வழிப்பறி, திருட்டு உட்பட 12 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது கைது செய்யப்பட்ட எதிரிகள் இருவரும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர். மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரியை பிடிக்க காவல் குழுவினர் தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளனர்.

# திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமில் நலத்திட்ட உதவிகள்

## கலெக்டர் வே.சரவணன் வழங்கினார்



**திருச்சி,செப்.21-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் சிறப்புத் திட்டத்தினை 02.08.2025 அன்று தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு சனிக்கிழமைதோறும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் (06.09.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், எட்டரை அரசினர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் பல்துறை உயர் சிறப்பு மருத்துவ முகாமினை கலெக்டர் வே.சரவணன். நேரில் பார்வையிட்டு முகாமின் செயல்பாடுகளை ஆய்வு செய்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பொதுமக்களுடன் கலந்துறையாடினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு மக்கள் நல்வாழ்வு துறையின் சார்பில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் தொடர்ச்சியாக செயல்படுத்தி வருகிறது. அந்தவகையில் மக்களை தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, வருமுன் காப்போம், இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களை தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவத் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ஒவ்வொருவரும் முழு உடற் பரிசோதனை செய்து கொள்வதற்கு தனியார் மருத்துவமனைகளுக்கு சென்றால் கட்டணம் செலுத்தி பரிசோதனை மேற்கொள்ள வேண்டியிருக்கும். இதனை கருத்திற் கொண்டு, ஏழை, எளிய மக்கள் முழு உடற் பரிசோதனை மேற்கொள்வதன் அவசியத்தை உணர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் இந்த சிறப்பு வாய்ந்த திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார்கள்.

இம்முகாம்களில் அடிப்படை மற்றும் உயர்நிலை மருத்துவப் பரிசோதனைகளுடன் முழுமையான உடல் ஆரோக்கியப் பரிசோதனைகளும் (உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், மின் இதய வரைபடம், எக்கோ, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், எக்ஸ்-ரே), காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறியும் பரிசோதனைகளும், 15 துறைகளைச் சார்ந்த நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளும் (பொது மருத்துவம் கண்கள் காது மூக்கு தொண்டை, பல் மருத்துவம், ஆயுஸ் மருத்துவம், மனநல மருத்துவம், மகப்பேறு மற்றும் மகளிர் இருதய நிபுணர், எலும்பு முறிவு, நாம்பியல் சிகிச்சை, முதல்வர் காப்பீட்டுத்திட்டம் மற்றும் இதயவியல் உள்ளிட்ட துறைகள்) வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது. ஓராண்டு காலத்திற்கு பொதுமக்களுக்கு இந்தத் திட்டத்தின் மூலம் பரிசோதனைகள் மேற்கொள்ளப் படவிருக்கிறது. எனவே, "நலம் காக்கும் ஸ்டாலின்" உயர் மருத்துவ சேவை முகாமினை பொதுமக்கள் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளலாம். இந்நிகழ்வின் போது, ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் எம்.பழனியாண்டி, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.எஸ்.குமரவேல், இணை இயக்குநர் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மரு.கோபிநாத், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ஹேமசந்த் காந்தி, மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# பூட்டிய வீட்டின் கதவை உடைத்து தங்க நகைகள் மற்றும் பொருட்கள் திருடியவர் கைது

**சென்னை செப் 21-**

சென்னை, பூந்தமல்லியில் வசித்து வரும் விவேகானந்தன் என்பவருக்கு அண்ணா நகர், சாந்தி காலனி, 8வது மெயின் ரோட்டில் சொந்தமாக ஒரு வீடு உள்ளதாகவும், அதனை பூட்டி வைத்துவிட்டு, அவ்வப்போது அண்ணா நகருக்கு வந்து மேற்படி வீட்டை பார்த்து செல்வதாகவும், கடைசியாக 17 ந் தேதி அன்று காலை, மேற்படி வீட்டிற்கு வந்து பின்னர் மாலை வீட்டை பூட்டிவிட்டு சென்றதாகவும், பின்னர் நேற்று முன் தினம் மேற்படி வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின் கிரில் கேட் உடைக்கப்பட்டு, வீட்டின் பீரோவில் வைத்திருந்த சுமார் 13 சவரன் தங்க நகைகள், ஐம்பொன் நடராஜர் சிலை, பித்தளை விளக்குகள் மற்றும் பொருட்கள் திருடு போயுள்ளதாகவும், விவேகானந்தன் என்பவர் அண்ணா நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

அண்ணா நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை செய்தும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரி லிங்கம் (எ) கணேஷ், என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து மேற்படி வீட்டிலிருந்து திருடிய சுமார் 1 ½ அடி நீளமுள்ள நடராஜர் ஐம்பொன் சிலை, சுமார் 30 கிலோ எடை கொண்ட 1 பித்தளை குத்து விளக்கு, வெள்ளி முலாம் பூசப்பட்ட மரக்கிளையுடன் கூடிய குருவி சிலை மற்றும் பித்தளை முலாம் பூசப்பட்ட 2 குவளைகள் ஆகியவை மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி லிங்கம் (எ) கணேஷ் மீது ஏற்கனவே சென்னை மற்றும் புறநகர் காவல் நிலையங்களில் சுமார் 25 திருட்டு வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

தொடர்ந்து விசாரணை நடைபெற்று வரும் நிலையில், விசாரணைக்குப் பின்னர் எதிரி லிங்கம் (எ) கணேஷ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.


**மாண்பமை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் அவர்கள், புதுக்கோட்டை.**
**ந.க.எண்.5564/2024/அ.6**

விஜயராணி.
க/பெ.பாண்டியன்.
517. குரும்பபட்டி.
புலிவலம் அஞ்சல்,
திருமயம், புதுக்கோட்டை.
– மனுதாரர்
வட்டாட்சியர், திருமயம்.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரரின் மாமியார் "பச்சையம்மாள்" என்பவர் கடந்த 31.12.2021–ம் தேதி மேற்படி முகவரியில் உள்ள வீட்டில் இறந்ததை எதிர்மனுதாரர் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார். இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினங்களுக்குள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம் தவறும்பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

**விஜயராணி,**
**மனுதாரர், திருமயம்.**



**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம். நன்னிலம்**
**O.S. No.26/2022 in I.A. No.86/2024**

M.பத்மாவதி.
– மனுதாரர்/ வாதி
– எதிர் –
1. K.கண்ணதாசன்,
2. K.குணசேகரன்,
3. K.ராஜேந்திரன்,
4. K.சகாதேவன்,
5. K.ஜெகதீசன்,
6. K.சீத்தாராமன்,
– எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

மனுதாரர் தரப்பில் கொடுத்த அறிவிப்பு

மேற்படி அசல் வழக்கில் தாங்கள் 3–ம் பிரதிவாதி ஆவீர்கள். தாங்கள் மற்றும் பிற பிரதிவாதிகளுக்கு எதிராக மேற்படி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதில் 3–ம் பிரதிவாதியாகிய தங்களுக்கு நீதிமன்றத்தில் ஆஜராகிட பலமுறை அழைப்பாணை அனுப்பப்பட்டும் தாங்கள் அழைப்பாணையை பெற்றுக் கொள்ளாமல் வேண்டுமென்றே தவிர்த்து வருகிறீர்கள். அதனால் இறுதி வாய்ப்பாக மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவு I.A. No.86/2024–ன்படி தங்களுக்காக இந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி 3–ம் பிரதிவாதியாகிய தாங்கள் வருகிற 23.10.2025 அன்று காலை 10.00 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டி வாய்தா போடப்பட்டுள்ளது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக சமூகம் நீதிமன்றத்தால் ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

**S.பழனிராஜா, B.A.,B.L.,**
**வழக்கறிஞர், நன்னிலம்.**



**BEFORE THE HON'BLE PRINCIPAL DISTRICT MUNISIF COURT AT KULITHALAI**
**O.S.No.103 of 2025**

Mrs.S.Gunasundari.
- Plaintiff
-Vs-
Mr.Senthilkumar & another
- Defendants

Mr.V.Senthilkumar,
Son of late Vellaisamy,
196, Nallur Road,
Panickampatty village,
Marudur Post,
Kulithalai Taluk,
Karur District- 639 107.

Sir,

Take notice that the Plaintiff had filed the above said suit seeking for the relief of Permanent injunction, and other consequential reliefs. The above case came up for hearing before the Hon'ble Principal District Munisif court at Kulithalai on 19.09.2025 and the Hon'ble Judge was pleased to order paper publication to you returanable by 23.10.2025 for your appearance.

Kindly take note that you should appear on 23.10.2025 at 10.30 AM before Hon'ble Principal District Munisif Court at Kulithalai failing which the said case will be decided in your absence.

**G.UMESHWARAN,**
**Counsel for Plainfiff.**
**Chennai-104**
**cell: 99414 40444**



**மாண்பமை குளித்தலை சப்–கோர்ட்டார் அவர்கள் சமூகம்**
**MCOP.No.61/2020**

முருகேசன், த/பெஅண்ணாவி,
முள்ளிப்பாடி, சேர்வைக்காரன்பட்டி அஞ்சல், கடவூர் வட்டம்,
கரூர் மாவட்டம்.
– மனுதாரர்
– எதிர் –
1.தனபாலன், த/பெ.ராமதாஸ்,
C2/75F, கைலாசபுரம், 5–வது தெரு, திருச்சி– 14,
2.சிவா, த/பெ.சுந்தர்ராஜன்,
5/19, பெரிய அயித்தாம்பட்டி,
N.பெரியபட்டி அஞ்சல்,
மணப்பாறை வட்டம்,
திருச்சி மாவட்டம்.
– எதிர்மனுதாரர்கள்

எதிர்மனுதாரர்களுக்கு அறிவிப்பு

இந்த நம்பர் வழக்கில் கடந்த 05.03.2019–ம் தேதியன்று ஏற்பட்ட சாலை விபத்தில் நஷ்டஈடு கோரி மனுதாக்கல் செய்து அம்மனுவின் பேரில் தங்களுக்கு பலமுறை நோட்டீஸ் அனுப்பியும் சார்வு ஆகாததால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் உத்தரவுப்படி பேப்பர் விளம்பரம் மூலம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவாகி அதன்பேரில் மேற்படி வழக்கின் வாய்தா 07.10.2025–ம் தேதியன்று போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் கோர்ட்டில் ஆஜராகி தங்கள் ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இந்த அறிவிப்பின் மூலம் கண்டிப்பாக அறியவும்.

**M.JEYARAMAN, B.A.,B.L.,**
**ADVOCATE, KARUR.**



**மாண்புமிகு குளித்தலை சார்பு நீதிமன்ற சமூகம் அவர்கள்**
**C.O.S.No.07/2024**

கனரா வங்கி, மாயனூர் கிளை
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– வாதி
– எதிர் –
ரமேஷ்குமார், த/பெ.மகாமுனி,
கதவு எண்.3/52,
மணவாசி அஞ்சல்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– 1–ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி நம்பர் வழக்கில் வாதி 1–ம் பிரதிவாதி மீது வங்கியில் கடன் பெற்ற வழக்கு சமூகம் கோர்ட்டில் தொடர்ந்துள்ளார். அதன் பேரில் 10.12.2025–ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும் என்பதை இதன் அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**K.சேக்அன்வர்தீன்,B.A.B.L.,**
**வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக்,**
**குளித்தலை.**



**மாண்புமிகு குளித்தலை சார்பு நீதிமன்ற சமூகம் அவர்கள்**
**O.S.No.199/2023**

கனரா வங்கி, குளித்தலை கிளை
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– வாதி
– எதிர் –
சர்மிளா, த/பெ.மனோகரன்,
கதவு எண்.20ஏ/1,
தெப்பக்குளத் தெரு,
குளித்தலை டவுன் & தாலுக்கா,
கரூர் மாவட்டம்.
– 1–ம் பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி நம்பர் வழக்கில் வாதி 1–ம் பிரதிவாதி மீது வங்கியில் கடன் பெற்ற வழக்கு சமூகம் கோர்ட்டில் தொடர்ந்துள்ளார். அதன் பேரில் 24.11.2025–ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் ஷை தேதியில் காலை 10.30 மணிக்கு கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி தெரிவித்துக் கொள்ளவும் என்பதை இதன் அறிவிப்பு மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**K.சேக்அன்வர்தீன்,B.A.B.L.,**
**வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக்,**
**குளித்தலை.**



Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 1 Santhanapuram, Madurai-Trichy 4 Way Main Road, Nagamangalam, Trichy-620 012
Ph: 0431-2680969
E-Mail: trichyedi@thinaboomi.com
RNI.Regn No.61511/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

thinaboomi.com
தினபூமி,
செப்டம்பர் 21, 2025

## டி-20-யில் 100 விக்கெட் எடுத்த முதல் இந்தியர்:

# அர்ஷ்தீப் சிங் புதிய சாதனை




அபுதாபி, செப். 21-

டி-20 கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட் எடுத்தவர்கள் பட்டியலில் இந்தியாவின் அர்ஷ்தீப் சிங் 3-வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**இந்திய அணி பேட்டிங்...**

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நடந்த 12-வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஓமன் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 188 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சாம்சன் 56 ரன்கள் அடித்தார். ஓமன் தரப்பில் ஷா பைசல், ஜிதன் ராமநந்தி, ஆமிர் கலீம் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

**தலா ஒரு விக்கெட்...**

அடுத்து 189 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஓமன் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 167 ரன்கள் சேர்த்தது. இதனால் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் தொடர்ந்து 3-வது வெற்றியை பெற்றது. ஓமன் அணியில் அதிகபட்சமாக ஆமீர் கலீம் 64 ரன்களும், ஹம்மது மிர்சா 51 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஹர்திக், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

**100 விக்கெட்டுகள்...**

இந்த ஆட்டத்தில் கைப்பற்றிய விக்கெட்டையும் சேர்த்து அர்ஷ்தீப் சிங் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் இது வரை 100 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். இந்த மைல் கல்லை அவர் 64 போட்டிகளில் எட்டியுள்ளார். இதன் மூலம் சர்வதேச டி20 கிரிக்கெட்டில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுகள் கைப்பற்றிய வீரர்களின் மாபெரும் சாதனை பட்டியலில் 3-வது இடத்தில் இருந்த பாகிஸ்தான் பவுலர் ஹாரிஸ் ரவூப்பை (71 போட்டிகள்) பின்னுக்கு தள்ளி அர்ஷ்தீப் சிங் 3-வது இடத்தை பிடித்துள்ளார்.

### குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்:

1. ரஷித் கான் - 53 போட்டிகள்.
2. ஹசரங்கா - 63 போட்டிகள்.
3. அர்ஷ்தீப் சிங் - 64 போட்டிகள்.
4. ஹாரிஸ் ரவூப் - 71 போட்டிகள்.
5. மார்க் ஆதிர் - 72 போட்டிகள் .

# ஆஸி., வீராங்கனை சாதனை




ஒருநாள் போட்டிகளில் 3-வது அதிவேக சதம் விளாசி ஆஸ்திரேலிய வீராங்கனை பெத் மூனி சாதனை படைத்துள்ளார். ஆஸ்திரேலிய மகளிரணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இந்த தொடரின் முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணியும், இரண்டாவது போட்டியில் இந்திய அணியும் வெற்றி பெற்றன. தொடரைக் கைப்பற்றப் போவது யார் என்பதை தீர்மானிக்கும் 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி தில்லியில் உள்ள அருண் ஜெட்லி திடலில் நேற்று (செப்டம்பர் 20) நடைபெற்றது.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி பேட்டிங்கைத் தேர்வு செய்து முதலில் விளையாடி வருகிறது. ஆஸ்திரேலிய அணி 40 ஓவர்களில் 340 ரன்களைக் கடந்து அபாரமாக விளையாடி வருகிறது. அந்த அணியில் தொடக்க வீராங்கனைகளாக களமிறங்கிய அலிஸா ஹீலி 30 ரன்களும், ஜியார்ஜியா வோல் 81 ரன்களும் எடுத்து அணிக்கு வலுவான தொடக்கத்தைத் தந்தனர். அதன் பின், எல்லிஸ் பெர்ரி 68 ரன்கள் எடுத்தார். அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தி சிறப்பாக விளையாடி வரும் பெத் மூனி 57 பந்துகளில் சதம் விளாசி அசத்தினார். இதன் மூலம், ஒருநாள் போட்டிகளில் அதிவேக சதம் விளாசிய 3-வது வீராங்கனை என்ற சாதனையை பெத் மூனி படைத்தார்.

## சாதனை படைத்த ஷா பைசல்

17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நடந்த 12-வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஓமன் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 188 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சாம்சன் 56 ரன்கள் அடித்தார். ஓமன் தரப்பில் ஷா பைசல், ஜிதன் ராமநந்தி, ஆமிர் கலீம் தலா 2 விக்கெட் வீழ்த்தினர். அடுத்து 189 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஓமன் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 167 ரன்கள் சேர்த்தது.

இதனால் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் தொடர்ந்து 3-வது வெற்றியை பெற்றது. இந்த ஆட்டத்தில் இந்திய அணி பேட்டிங் செய்தபோது 2-வது ஓவரை ஓமன் வேகப்பந்து வீச்சாளர் ஷா பைசல் வீசினார். அந்த ஓவரில் ரன் எதுவும் விட்டுக்கொடுக்காத அவர் சுப்மன் கில்லின் விக்கெட்டை வீழ்த்தினார். இதன் மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் இந்தியாவுக்கு எதிராக பவர்பிளேயில் விக்கெட் கைப்பற்றிய முதல் அசோசியேட் (உறுப்பு நாடுகள்) பந்து வீச்சாளர் என்ற அரிய சாதனையை படைத்துள்ளார்.

## ஆமிர் கலீம் புதிய சாதனை




17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நடந்த 12-வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் அரைசதம் அடித்த ஆமிர் கலீமுக்கு வயது 43 வருடங்கள் மற்றும் 303 நாட்கள். இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் 3 வடிவிலான போட்டிகளையும் (டெஸ்ட், ஒருநாள் மற்றும் டி20) சேர்த்து இந்தியாவுக்கு எதிராக அதிக வயதில் அரைசதம் அடித்த வீரர் என்ற மாபெரும் சாதனையை ஆமிர் கலீம் படைத்துள்ளார்.

இதற்கு முன்பு, 1946-ம் ஆண்டு, இங்கிலாந்து முன்னாள் வீரர் வாலி ஹேமண்ட், தனது 43 வயது 31 நாட்களில் இந்தியாவிற்கு எதிராக டெஸ்ட் போட்டியில் 69 ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. தற்போது, 43 வயது 303 நாட்களில் இந்த சாதனையை நிகழ்த்தி, ஆமிர் கலீம் புதிய வரலாறு படைத்துள்ளார். அந்த பட்டியல் வருமாறு., 1. ஆமிர் கலீம் - 43 வயது 303 நாட்கள், 2. வாலி ஹேமண்ட் - 43 வயது 31 நாட்கள், 3. பாப் சிம்ப்சன் - 41 வயது 359 நாட்கள்.

## ரூ.277 கோடியில் 243 பள்ளிகளில்

# புதிய கட்டிடங்களுக்கான பணிகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல்



சென்னை, செப். 21-

ரூ.277 கோடியில் 243 பள்ளிகளில் புதிய கட்டிடங்களுக்கான பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

பள்ளிக் கல்வித்துறை சார்பில் சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்றார். இந்த விழாவில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 2,715 புதிய ஆசிரியர்களுக்கான நுழைவுநிலைப் பயிற்சியினை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்து, பயிற்சிக் கையேட்டினை வெளியிட்டார்.

தொடர்ந்து ரூ.277 கோடி மதிப்பீட்டில் சென்னை - காமராஜர் சாலையில் பாரத சாரண சாரணியர் தலைமை அலுவலகக் கட்டிடம் மற்றும் செங்கல்பட்டு, கள்ளக்குறிச்சி, திருப்பத்தூர், திருவள்ளூர், திருவண்ணாமலை, வேலூர், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, சிவகங்கை, விருதுநகர், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, கரூர், சேலம், நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 243 பள்ளிகளில் கட்டப்படவுள்ள வகுப்பறைக் கட்டிடங்கள், ஆய்வகக் கட்டிடங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச்சுவர் உள்ளிட்ட இதர கட்டிடங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

மேலும் ரூ.94 கோடியில் அரியலூர், செங்கல்பட்டு, கடலூர், திண்டுக்கல், ஈரோடு, கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், புதுக்கோட்டை, ராணிப்பேட்டை, சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருவள்ளூர், திருவாரூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, திருச்சி, விழுப்புரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் உள்ள 59 பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டிடங்கள், ஆய்வகக் கட்டிடங்கள், குடிநீர் வசதிகள், சுற்றுச்சுவர் மற்றும் கட்டிடங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் அன்பில் மகேஸ், கே.என். நேரு, மா.சுப்பிரமணியன் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றனர்.

# ஓமன் அணிக்கு எதிரான போட்டி கடுமையாக இருந்தது: சூர்யகுமார்



அபுதாபி, செப். 21-

ஓமனுக்கு எதிரான போட்டி கடுமையாக இருந்ததாக இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் தெரிவித்துள்ளார்.

**கடைசி லீக் ஆட்டம்...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நடந்த 12-வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஓமன் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 188 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சாம்சன் 56 ரன்கள் அடித்தார். ஓமன் தரப்பில் ஷா பைசல், ஜிதன் ராமநந்தி, ஆமிர் கலீம் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

**189 ரன் இலக்கு....**

அடுத்து 189 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஓமன் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 167 ரன்கள் சேர்த்தது. இதனால் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் தொடர்ந்து 3-வது வெற்றியை பெற்றது. ஓமன் அணியில் அதிகபட்சமாக ஆமீர் கலீம் 64 ரன்களும், ஹம்மது மிர்சா 51 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஹர்திக், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

**கடும் போட்டி...**

இந்நிலையில் இந்த வெற்றிக்குப்பின் இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் அளித்த பேட்டியில், "ஓமன் அற்புதமாக விளையாடியது என்று நினைக்கிறேன். அவர்களின் பயிற்சியாளராக சுலு சார் (சுலக்ஷன் குல்கர்ணி) இருப்பதால் கடுமையான போட்டி மனப்பான்மை இருக்கும் என்று தெரியும். அவர்கள் பேட்டிங் செய்ததை பார்த்து மிகவும் ரசித்தேன். இங்கு மிகவும் ஈரப்பதமாக இருக்கிறது. அவர் (ஹர்திக் பாண்ட்யா) அவுட் ஆனது துரதிர்ஷ்டவசமானது. ஆனால் அவரை விளையாட்டில் இருந்து விலக்கி வைக்க முடியாது. சூப்பர் 4 சுற்றுக்கு எல்லாமே தயார்" என்று கூறினார்.

## தமிழக வில்வித்தை வீராங்கனைக்கு துணை முதல்வர் உதயநிதி உதவி

சென்னை, செப். 21-

தமிழக வில்வித்தை வீராங்கனைக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நிதி உதவி வழங்கினார்.

தமிழக வில்வித்தை வீராங்கனை கே.எஸ்.வெனிசா ஸ்ரீக்கு, வில்வித்தை பயிற்சிக்கு தேவையான உபகரணத்தை ரூ.4.10 லட்சம் செலவில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் வழங்கினார்.


இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வில் வித்தை வீராங்கனை தங்கை கே.எஸ்.வெனிசா ஸ்ரீ சர்வதேச அளவில் பதக்கங்களைக் குவித்து தமிழ்நாட்டுக்குப் பெருமைத் தேடித்தந்து வருகிறார். அவரின் வில் வித்தை பயிற்சிக்குத் தேவையான உபகரணத்தை ரூ.4.10 லட்சம் செலவில் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியில் இருந்து நேற்று முன்தினம் வழங்கினோம்.

தங்கை வெனிஷா ஸ்ரீயின் சாதனைகள் தொடர என் அன்பும், வாழ்த்தும்!" என்று பதிவிட்டுள்ளார்.

## ஆசிய கோப்பை சூப்பர் 4 சுற்று ஆரம்பம்:

# இந்திய அணியின் ஆட்ட விவரம்




துபாய், செப். 21-

ஆசிய கோப்பை லீக் சுற்றுகள் நிறைவடைந்து சூப்பர் - 4 சுற்று ஆரம்பித்துள்ள நிலையில் இந்திய அணியின் ஆட்ட விவரங்கள் வெளியாகியுள்ளது.

**இரு பிரிவாக...**

8 அணிகள் பங்கேற்றிருந்த 17-வது ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடர் விறுவிறுப்பான கட்டத்தை எட்டியுள்ளது. இதில் பங்கேற்றிருந்த 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டு லீக் சுற்றில் மோதின. லீக் சுற்றுகள் முடிந்தது. இதன் முடிவில் 'ஏ' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், 'பி' பிரிவில் இலங்கை, வங்காளதேச அணிகள் சூப்பர்4 சுற்றுக்கு தகுதி பெற்றன. சூப்பர்4 சுற்றில் ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். இதன் முடிவில் டாப்-2 இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்குள் நுழையும். சூப்பர்4 சுற்றின் முதல் ஆட்டத்தில் வங்காளதேசம் - இலங்கை அணிகள் பலப்பரீட்சை நடத்த உள்ளன.

### இந்திய அணிக்குரிய ஆட்டம்:

1. 21-ம் தேதி - இந்தியா - பாகிஸ்தான்.
2. 24-ம் தேதி - இந்தியா - வங்காளதேசம்.
3. 26-ம் தேதி - இந்தியா - இலங்கை .

# 2026 தேர்தலில் 2 பேருக்கு இடையே தான் போட்டி..!

## நாகையில் விஜய் பரபரப்பு பேச்சு




நாகை, செப். 21-

2026 தேர்தலில் 2 பேருக்கு நடுவில்தான் போட்டியே.. ஒன்று தவெக. ஒன்று திமுக. என்று விஜய் தெரிவித்துள்ளார்.

நாகை புத்தூர் ரவுண்டானா அருகே உள்ள அண்ணாசிலை சந்திப்பு பகுதியில் தவெக தலைவர் விஜய் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது சனிக்கிழமைகளில் பிரசாரம் மேற்கொள்வது ஏன்? என்பது குறித்து விளக்கம் அளித்தார். மேலும் அவர் பேசியதாவது;-

அதென்ன சனிக்கிழமைகளில் பிரசாரம் என விமர்சனம் செய்தார்கள். முக்கியமாக உங்கள் வேலைக்கு எந்த இடையூறும் இருக்கக் கூடாது என்பதற்காக விடுமுறை நாட்களில், ஓய்வு நாட்களில் வருவதுதான் திட்டம். அரசியல் சிலருக்கு நாம் ஓய்வு கொடுக்க வேண்டும் அல்லவா.. அதனால்தான் ஓய்வு நாட்களில் திட்டமிட்டு பிரசாரம் செய்து வருகிறோம். நான் ஒன்றும் தனி ஆள் கிடையாது., மாபெரும் பெண்கள் படையின் சகோதரன், மாபெரும் இளைஞர்களின் சகோதரன். 2026 தேர்தலில் 2 பேருக்கு நடுவில்தான் போட்டியே.. ஒன்று தவெக. ஒன்று திமுக. இந்த பூச்சாண்டி வேலையெல்லாம் விட்டுவிட்டு நேரடியாக கெத்தாக தேர்தலுக்கு வாருங்கள். கொள்ளையடிக்கிற நீங்களா.. இல்லை மக்கள் வீட்டில் ஓட்டாக இருக்கும் நானா என பார்த்துவிடலாம். இவ்வாறு அவர் பேசினார்.

## சிறப்பாக பந்து வீசியது:

# ஓமன் அணிக்கு சாம்சன் புகழாரம்




அபுதாபி, செப். 21-

ஓமனுக்கு எதிரான ஆட்டத்தில் சஞ்சு சாம்சன் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்ட நிலையில், ஓமன் மிகவும் சிறப்பாக பந்து வீசியதாக சஞ்சு சாம்சன் தெரிவித்துள்ளார்.

**சாம்சன் 56 ரன்கள்...**

ஆசிய கோப்பை கிரிக்கெட் தொடரில் அபுதாபியில் நேற்று நடந்த 12-வது மற்றும் கடைசி லீக் ஆட்டத்தில் இந்தியா - ஓமன் அணிகள் மோதின. இதில் டாஸ் ஜெயித்த இந்திய கேப்டன் சூர்யகுமார் யாதவ் முதலில் பேட்டிங்கை தேர்ந்தெடுத்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 188 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக சாம்சன் 56 ரன்கள் அடித்தார். ஓமன் தரப்பில் ஷா பைசல், ஜிதன் ராமநந்தி, ஆமிர் கலீம் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

**3-வது வெற்றியை....**

அடுத்து 189 ரன் இலக்கை நோக்கி ஆடிய ஓமன் அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 167 ரன்கள் சேர்த்தது. இதனால் இந்தியா 21 ரன் வித்தியாசத்தில் தொடர்ந்து 3-வது வெற்றியை பெற்றது. ஓமன் அணியில் அதிகபட்சமாக ஆமீர் கலீம் 64 ரன்களும், ஹம்மது மிர்சா 51 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் ஹர்திக், அர்ஷ்தீப் சிங், ஹர்ஷித் ராணா மற்றும் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். சஞ்சு சாம்சன் ஆட்ட நாயகனாக தேர்வு செய்யப்பட்டார்.

**என் உடற்தகுதியில்...**

இந்நிலையில் இந்த வெற்றிக்குப்பின் ஆட்ட நாயகன் சஞ்சு சாம்சன் அளித்த பேட்டியில், "இங்கே ஈரப்பதமும் வெப்பமும் அதிகமாக இருந்தது. அதை சமாளிக்க கடந்த சில வாரங்களாக என் உடற்தகுதியில் வேலை செய்து வருகிறேன். நாங்கள் ஒரு புதிய பயிற்சியாளரை அழைத்துக்கொண்டு சோதனை நடத்தினோம். களத்தில் சிறிது நேரம் செலவிட முடிந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

**ஓமனுக்கு பாராட்டு...**

அவர்கள் (ஓமன்) மிகவும் சிறப்பாக பந்து வீசினர். ஓமனுக்கு பாராட்டு தெரிவிக்க வேண்டும். பவர்பிளேயிலும் நன்றாக பந்து வீசினர். நான் எப்போதும் நேர்மறையாக இருக்க என் பலத்தை ஆதரிக்கிறேன். நாட்டிற்காக பேட்டிங்கில் ஏதேனும் பங்களிப்பு செய்தால், அதில் உள்ள நேர்மறையானவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# சென்னையில் மெட்ரோ ரெயில் க்யூஆர் டிக்கெட் சேவை பாதிப்பு

சென்னை, செப். 21-

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மெட்ரோ க்யூஆர் ஆன்லைன் டிக்கெட் சேவைகள் தற்காலிகமாக செயல்படவில்லை என சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

எனவே, பயணிகள் சி.எம்.ஆர்.எல். மொபைல் செயலி, வாட்ஸ்அப், போன்-பே மூலம் டிக்கெட்களை பெறலாம். மேலும் மெட்ரோ ரெயில் பயணிகள் கவுண்டரிலும் டிக்கெட்டுகளைப் பெறலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால், நேற்று காலை முதல் மெட்ரோ ரெயிலில் பயணிக்கும் பயணிகள் க்யூஆர் சேவை மூலம் டிக்கெட் எடுக்க முடியாமல் அவதியடைந்துள்ளனர்.

# மதுபாட்டில்களுக்கு ரூ.10 கூடுதலாக வாங்குவது ஏன்?

## அமைச்சர் முத்துசாமி விளக்கம்

ஈரோடு, செப். 21-

மதுபாட்டில்களுக்கு கூடுதலாக ரூ.10 வாங்குவது ஏன்? என்பது குறித்து அமைச்சர் முத்துசாமி விளக்கம் அளித்துள்ளார்.

ஈரோட்டில் மதுவிலக்கு, ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துசாமி செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- டாஸ்மாக் கடைகளில் வாங்கும் மதுபாட்டில்களை மதுப்பிரியர்கள் சாலைகளில் வீசுவது, வயல்கள், நீரோடைகளில் வீசுவதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது. இதற்கு தீர்வு காணும் வகையில் மது வாங்குபவர்களிடம் பாட்டில் ஒன்றுக்கு தலா ரூ.10 கூடுதலாக வாங்கப்படுகிறது.

மதுகுடித்து விட்டு பாட்டிலை திரும்பவும் கடையில் ஒப்படைத்தால் அந்த பாட்டிலுக்கு ரூ.10 திரும்ப வழங்கப்படும். மதுபாட்டில்கள் திரும்ப பெறும் திட்டத்தில் துறையின் அமைச்சராகிய என்னுடன் கடைக்கோடி பணியாளர்களும் இணைந்து பணியாற்ற வேண்டும். ஒருங்கிணைந்து பணியாற்றினால் இந்த திட்டத்தை வெற்றிகரமாக செய்து முடிக்கலாம். இவ்வாறு அவர் கூறினார்.

# ட்ரம்பின் கோல்டு கார்டு திட்டம்: இந்திய பணியாளர்களுக்கு சிக்கல்

வாஷிங்டன், செப். 21-

அதிபர் ட்ரம்பின் புதிய கோல்டு கார்டு திட்டத்தால் இந்திய பணியாளர்களுக்கு சிக்கல் ஏற்படும் அபாயம் உள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கடந்த ஜனவரி 20-ந்தேதி ட்ரம்ப் பொறுப்பேற்று கொண்ட பிறகு பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அரசாங்க செலவினங்களை குறைப்பதற்காக எலான் மஸ்க் தலைமையில் புதிய துறையை உருவாக்கினார். சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

அமெரிக்காவின் பொற்காலம் மீட்கப்படும் வகையிலான நடவடிக்கையை எடுப்பேன் என தெரிவித்த அவர், சீனா, மெக்சிகோ, கனடா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடுமையான வரி விதிப்புகளை அமல்படுத்தி உத்தரவிட்டார்.

இதேபோன்று, அமெரிக்காவில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் அனைவரும் 30 நாட்களுக்கு மேல் தங்கினால் அவர்கள் அரசிடம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறையையும் அறிமுகப்படுத்தினார். சட்டவிரோத குடியேறிகளை ராணுவ விமானம் உதவியுடன் அவர்களுடைய சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பினார். இதுபோன்ற நடவடிக்கைகளால் இந்தியர்கள் அதிக அளவில் பாதிக்கப்பட்டனர். இந்தியாவுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்ட 25 சதவீத வரியுடன் கடந்த ஆகஸ்டு 27-ந்தேதி, கூடுதலாக 25 சதவீத வரி என மொத்தம் 50 சதவீத வரி விதிப்பை அறிவித்து அமல்படுத்தினார்.

இதனால், இந்திய ஏற்றுமதி சந்தை ஜூன் தொடங்கி ஆகஸ்டு வரையிலான 3 மாதங்களில் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில், அமெரிக்காவில் பணிபுரியும் வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலான அறிவிப்பு ஒன்றை ட்ரம்ப் வெளியிட்டு உள்ளார்.

இதன்படி, எச்1-பி விசாக்களுக்கான கட்டணம் 1 லட்சம் டாலர் அளவுக்கு உயர்த்தப்படுகிறது. வெள்ளை மாளிகையின் ஓவல் அலுவலகத்தில், வர்த்தக மந்திரி ஹோவார்டு லுட்னிக் முன்னிலையில் இதற்கான அறிவிப்பில் ட்ரம்ப் கையெழுத்திட்டார். இதன்பின்பு அவர் கூறும்போது, எங்களுக்கு பணியாளர்கள் தேவை. அதிலும், எங்களுக்கு சிறந்த பணியாளர்கள் தேவை. அதனை இந்த அறிவிப்பு உறுதி செய்யும். அதுவே நடக்க போகிறது. அமெரிக்க பணியாளர்களை நீக்காமல், அதே வேளையில், உண்மையில் மிக திறன் வாய்ந்த நபர்களை நாட்டுக்குள் கொண்டு வருவது உறுதி செய்யப்படும் நோக்கத்தில் இந்த கட்டணம் இருக்கும் என்றார்.

அமெரிக்கர்களிடம் இருந்து வேலைவாய்ப்புகளை பறிக்க முயற்சிப்பதற்கு பதிலாக, இந்த நடவடிக்கை அமையும். இதனால், அமெரிக்க கஜானாவில், கோடிக்கணக்கில் நிதி வந்து சேரும். இந்த நிதியை வரி குறைப்புக்கு நாங்கள்பயன்படுத்தி கொள்வோம் என்றார்.



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி ஓடைப்பட்டி முன்னாள் அ.தி.மு.க. ஊராட்சி மன்ற தலைவர் பழனிச்சாமி, ஒட்டன்சத்திரம் முன்னாள் அக்ரோ தலைவர் சக்கம்பட்டி சிவசுப்பிரமணி உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அக்கட்சியிலிருந்து விலகி உணவுத்துறை அமைச்சர் அர.சக்கரபாணி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர்.

# அருப்புக்கோட்டையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் அமைச்சர் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்



**அருப்புக்கோட்டை, செப். 21-**

அருப்புக்கோட்டை சொக்கலிங்கபுரம் சுப்புராஜ் மண்டபத்தில் வார்டு 21 மற்றும் 25 வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் வருவாய் துறை, நகராட்சி நிர்வாகம், மின் வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறை அரங்குகள் அமைக்கப்பட்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது. இந்த முகாமை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேரில் ஆய்வு செய்தார்.

மேலும் இந்த முகாமில் மின் வாரிய பெயர் மாற்றம், பட்டா பெயர் மாற்றம் பதிவு செய்த பயனாளிகளுக்கு உத்தரவு நகல் மற்றும் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

இந்த முகாமில் நகர் மன்ற தலைவர் சுந்தரலட்சுமி, முன்னாள் நகர் மன்ற தலைவர் சிவப்பிரகாசம், தாசில்தார் செந்தில்வேல் நகர் மன்ற துணை தலைவர் பழனிச்சாமி, ஆணையாளர் ராஜமாணிக்கம் நகர கழகச் செயலாளர் ஏ.கே. மணி நகர மன்ற உறுப்பினர்கள் தி.மு.க. நிர்வாகிகள்உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் தி.மு.க. சார்பில் 'ஓரணியில் தமிழ்நாடு' பொதுக்கூட்டம்



**திருமங்கலம். செப்.21-**

திருமங்கலம் சட்டமன்ற தொகுதி முத்தப்பன்பட்டியில் மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் எனும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

தி.மு.க. தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்புக்கிணங்க மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் எனும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக் கூட்டம் நேற்று மாலை திருமங்கலம் தொகுதி முத்தப்பன்பட்டியிலுள்ள கலைஞர் திடலில் சிறப்பாக நடைபெற்றது. எழுச்சியுடன் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்து ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு குறித்து சிறப்புரை யாற்றினார்.

இதனை தொடர்ந்து தமிழ்நாட்டின் மண் மொழி மானம் காத்திடும் வகையில் நடைபெற்ற தீர்மான ஏற்பு பொதுக்கூட்டத்தில் கழக பொறியாளர் அணி மாநிலச் செயலாளர் எஸ்.கே.பி.கர்ணா சிறப்பாளராக கலந்து கொண்டு உரையாற்றினார். இதனை தொடர்ந்து மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமையில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் எனும் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானத்தை பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கானோர் திரும்பக் கூறி ஏற்றுக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர்கள் அலாவுதீன், வனராஜா, ராமமூர்த்தி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் பாண்டியன், ஞானசேகரன், போடி காமராஜ், ,மாவட்ட அவை தலைவர் நாகராஜன், முன்னாள் எம்.எல்.ஏ க்கள் முத்து ராமலிங்கம், லதா அதியமான், மாவட்ட பொருளாளர் கொம்பாடி தங்கம், பொதுக் குழு உறுப்பினர்கள் சிவமுருகன், ஆதிமூலம், செல்வம், ஒன்றிய செயலாளர்கள் மதன் குமார், தனபாண்டியன், தங்கப்பாண்டி, பாண்டியன், ஆலம்பட்டி சண்முகம், முத்துராமன்,நாகராஜ், ராமமூர்த்தி,தனசேகரன், நகர் செயலாளர் ஸ்ரீதர், நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக் குமார், நகர்மன்ற துணை தலைவர் ஆதவன் அதியமான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், பரமசிவம்,ஆலங்குளம் செல்வம்,செல்வேந்திரன், ஜெயச்சந்திரன், சிவனேசன், ராஜசேகர், கிருத்திகா தங்கப்பாண்டி, பிரமிளா, ஸ்வர்ணா,பேரையூர் செயலாளர் வருசை முகமது, டி.கல்லுப்பட்டி பேரூராட்சி தலைவர் முத்து கணேசன், முன்னாள் மண்டல தலைவர் சுவிதாவிமல்,மெப்கோ தொழிற்சங்க தலைவர் முத்துக்குமார், துணை அணி அமைப்பாளர்கள் ஜெதீஸ், சுரேஸ், காளிதாஸ்,தவமணி முருகன், கவி ஸ்ரீ தினேஷ்,சாதிக், முத்து மற்றும் தெற்கு மாவட்ட கழக, நகர,ஒன்றிய, பேரூர்,கிளை, வார்டு கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நத்தம் வேணுராஜகோபால சுவாமி கோவிலில் புரட்டாசி கடைசி சனி வாரவிழா



**நத்தம், செப். 21-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் கோவில்பட்டி அக்ரஹாரத்தில் உள்ள பாமாருக்மணி சமேத வேணுராஜகோபால கோவிலில் புரட்டாசி மாத முதல் வார சனிக்கிழமையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதையொட்டி மூலவருக்கும், உற்சவருக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும், பூஜைகளும் நடந்தது. தொடர்ந்து பக்தர்கள் துளசி, மல்லிகை,ரோஜா உள்ளிட்ட பல்வேறு பூ மாலைகளை சுவாமிக்கு காணிக்கையாக செலுத்தி சுவாமி தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கபட்டது.

இதைப்போலவே கோவில்பட்டி வீர ஆஞ்சநேயர் கோவிலிலும் புரட்டாசி முதல் வார சனிக்கிழமையையொட்டி சுவாமிக்கு சிறப்பு அபிஷேகங்களும், பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது. இங்கும் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

# நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா கோலாகலம்



**நத்தம், செப். 21-**

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் புரட்டாசி மாத பிரதோஷ விழா நடந்தது.இதையொட்டி நந்தி சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது.தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.

இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது. இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

# முதுகுளத்தூர் அரசு ஆஸ்பத்திரியில் காட்டு பன்றி நுழைந்து அட்டகாசம்

**முதுகுளத்தூர், செப். 21-**

ராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் பகுதியில் கடந்த சில மாதங்களாக கிராம புறங்களில் உள்ள வயல் மற்றும் தோட்டங்களில் காட்டு பன்றிகள் விவசாயிகளுக்கு தொந்தரவுகள் ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் முதுகுளத்தூர் டவுனில் நேற்று திடீரென காட்டு பன்றி ஒன்று தெருக்களில் ஓடியது. இதில் பைக்கில் சென்றவர்களை மோதியதில் ஒருவர் விழுந்ததில் சிறு காயத்துடன் சென்று விட்டார்.

தெருவில் சென்ற மற்ற ஒருவரையும் மோதியது. பின்னர் அரசு ஆஸ்பத்திரியில் திடிரென பிரசவ வார்டிற்குள் நுழைந்து விட்டது.தகவல் அறிந்து தீயணைப்பு நிலைய வீரர்களும் பன்றி பிடிக்க கூடிய வர்களும் சேர்ந்து காட்டுப்பன்றி பிடித்தனர் . பின்னர் பிடிபட்ட காட்டு பன்றியை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். இதில் பிரசவ வார்டில் இருந்த பெண்கள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

# திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அருகே உலக ஓசோன் தினம் விழிப்புணர்வு பிரச்சாரம்



**வத்தலகுண்டு, செப். 21-**

திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை வட்டம் மேட்டுப்பட்டி கிராமத்தில் உலக ஓசோன் தினத்தை முன்னிட்டு வைகை அறக்கட்டளையின் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கமான யூ ஆர் ஐ உலகளாவிய பசுமை நிதியகம் இணைந்து உலக ஓசோன் தின விழிப்புணர்வு பிரச்சாரத்தை நடத்தியது இந்த பிரச்சாரத்தை முன்னாள் பஞ்சாயத்து தலைவர் தீபா துவக்கி வைக்க சமுதாய ஆதரவு கூட்ட கூட்டமைப்பு தலைவர் தலைவர் சியாமளா முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் தமிழக நதிகள் பாதுகாப்பு கூட்டமைப்பு மாநில அமைப்பாளர் அண்ணாதுரை பூமி வெப்பமயமாவதால் கால நிலை மாற்றம் ஏற்படுகிறது இதனால் பருவமழை உரிய காலத்தில் பொழிவதில்லை. அதிக வெப்பம் ஏற்படுகிறது நீர்நிலைகள் வற்றுகிறது இந்த சூழலில் பூமி சூடாவதை தவிர்க்க நம்மால் இயன்ற அளவுகாடுகள்அளவைப்பெருக்கவும் இயற்கை விவசாயத்தைகடைபிடிக்கவும் எளிதில் மக்காத பிளாஸ்டிகளே தவிர்க்கவும் மரபுசாராஎரிசக்திகளை உருவாக்கவும் அனைவரும்ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் வருகின்ற சந்ததியினருக்கு இயற்கையை நாம் விட்டுச் செல்ல வேண்டும் என்று விளக்கினார்.

இறுதியில் உறுதிமொழியுடன் நிறைவு செய்தனர் இந்த நிகழ்ச்சியை வைகை அறக்கட்டளை திட்ட மேலாளர் விசாலினி மற்றும் ஒருங்கிணைப்பாளர் விக்னேஷ் ஏற்பாடுகள் செய்து இருந்தனர்

# மக்கள் பயன்படுகிற திட்டங்களை யார் துவங்கினாலும் அவற்றை அ.தி.மு.க அரசு ஒருபோதும் நிறுத்தியதில்லை

## முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் பேச்சு



**திருமங்கலம், செப்.21-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் தொகுதி கள்ளிக்குடி கிழக்கு ஒன்றிய வாக்குச்சாவடி கிளைக் கழக நிர்வாகிகளுக்கான ஆலோசனை கூட்டம் மற்றும் பயிற்சி முகாம் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கிணங்க கள்ளிக்குடி கிழக்கு ஒன்றிய செயலாளர் வேப்பங்குளம் கண்ணன் ஏற்பாட்டின் பேரில் கே. வெள்ளாகுளம் ஓடைப்பட்டி டி.கொக்குளம் ஆகிய பகுதிகளில் பூத் கமிட்டிகிளை நிர்வாகிகள் பயிற்சி முகாம்கள் நடைபெற்றது. இந்த பயிற்சி முகாமில் மதுரை மண்டல ஐ.டி விங் பொருளாளர் அப்துல் சமது, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட ஐ.டி விங் செயலாளர் சதீஷ்குமார், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட ஐ.டி விங் இணைச் செயலாளர் முத்துக்குமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினர்.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர், சட்டமன்ற எதிர்கட்சி துணைத் தலைவர் ஆர்.பி.உதயகுமார் கலந்து கொண்டு தலைமையேற்று பேசியதாவது:- தி.மு.க. அரசு கொடுத்த வாக்குறுதிகளில் 10 சதவீதம் கூட நிறைவேற்றவில்லை. அ.தி.மு.க. அரசின் திட்டங்களை ஏன் நிறுத்துகிறீர்கள் என சட்டசபையில் கேட்டால் பதில் இல்லை. யார் கொண்டு வந்த திட்டமாக இருந்தாலும் அவற்றை அதிமுக அரசு எந்த திட்டத்தையும் நிறுத்தியதில்லை மக்களுக்குப் பயன்படுகிற எந்த திட்டமாக இருந்தாலும் யார் துவங்கினாலும் அதை அ.தி.மு.க. அரசு செயல்படுத்தியது. நிறுத்தப்பட்ட திட்டங்கள் மீண்டும் செயல்பட எடப்பாடியார் தலைமையில் அம்மா ஆட்சி மலர வேண்டும் என்று பேசினார்.

இக்கூட்டத்தில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் வெற்றிவேல், மாவட்ட பொருளாளர் வக்கீல் தமிழ்ச்செல்வம்,ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன், பிரபுசங்கர், ராமசாமி, மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சிங்கராஜ் பாண்டியன், சரவணபாண்டி, பாஸ்கரன், சிவரக்கோட்டை ஆதி (எ) ராஜா மற்றும் கள்ளிக்குடி கிழக்கு ஒன்றிய பூத் கமிட்டி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# பிங்க் நிற பஸ்கள் உங்களை ஒருபோதும் கரை சேர்க்காது என்பதை துணை முதல்வர் உதயநிதி புரிந்து கொள்ள வேண்டும்

# எடப்பாடியார் செல்லும் பச்சை நிற பேருந்தை வெல்கம், வெல்கம் என்று வரவேற்று மக்கள் வெற்றிவாகைசூட தயாராகி விட்டார்கள்

## மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் அறிக்கை

**மதுரை, செப் 21-**

பிங்க் நிற பஸ்கள் உங்களை ஒருபோதும் கரை சேர்க்காது என்பதை உதயநிதி புரிந்து கொள்ள வேண்டும்.எடப்பாடியார் செல்லும் பச்சை நிற பஸ்க்கு தான் வெல்கம் -வெல்கம்என்று வரவேற்று மக்கள் வெற்றி வாகைசூட தயாராகி விட்டார்கள் என்று அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் தெரிவித்தார்.

இது குறித்து அ.தி.மு.க.மாநில மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

அ.தி.மு.க.பொதுச்செயலாலர் எடப்பாடியார் தமிழகத்தை பசுமையாக்க பச்சை நிற பேருந்தில் எழுச்சி பயணத்தை மேற்கொண்டு வருகிறார். இதுவரை 70 லட்சத்திற்கும் மேற்பட்ட



மக்களை சந்தித்து தி.மு.க. அரசின் மக்கள் விரோத செயல்களை தோலுரித்துக் காட்டியும், மீண்டும் மக்களை காக்கும் வகையில் பல்வேறு தேர்தல் வாக்குறுதிகளையும் அளித்து வருகிறார். இது மக்கள் மத்தியில் மாபெரும் எழுச்சியை பெற்று வருகிறது. இந்த எழுச்சி பயணத்தை கண்டு முதல்வர் ஸ்டாலின் முதல் உதயநிதி மற்றும் தி.மு.க. மூத்த அமைச்சர்கள் விமர்சனம் செய்தார்கள். குறிப்பாக சுந்தரா ட்ராவல்ஸ் என்று கூட ஏளனம் செய்தார்கள்.ஆனால் இன்றைக்கு மக்கள் தரும் ஆதரவைக் கண்டு அஞ்சி நடுங்கி வருகிறார்கள்.

கடந்த இரண்டு நாளுக்கு முன்பு நடைபெற்ற அரசு விழாவில் உதயநிதி ஸ்டாலின் பச்சை நிற பேருந்தை மகளிர் பயன்படுத்தும் பிங்க் கலர் பேருந்து ஓவர் டேக் செய்து வெற்றி வாகை சூடும் என்று கூறுகிறார். இதை நினைத்தால் நகைச்சுவை தான் இருக்கும். இன்றைக்கு தமிழகத்தில் 22,000 பேருந்துகள் உள்ளது.இதில் 1.50 லட்சம் பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இதில் ஏறத்தாழ பத்தாயிரம் பேருந்துகள் காலாவதி பேருந்துகள் உள்ளது. கடந்த 2024 கொள்கை விளக்கக் குறிப்பில் கூட தமிழகத்தில் 10,001 பேருந்துகள் அதாவது 49.60% பேருந்துகள் காலாவதி ஆக உள்ளது என்று உள்ளது. எந்த பேருந்துகளும் வாங்கவில்லை குறிப்பாக எடப்பாடியார் ஆட்சி காலத்திலும், அம்மா ஆட்சி காலத்தில் தான் ஏறத்தாழ 15,000 பேருந்துகள் வாங்கப்பட்டன.

குறிப்பாக மகளிர்க்கு இலவச பேருந்து திட்டத்தை கொண்டு வந்தார்கள்.ஆனால் அதற்காக புதிய பேருந்துகள் வாங்கவில்லை என எடப்பாடியார் பலமுறை குற்றம் சாட்டி வருகிறார்.அதை அவர்கள் மறுக்க முடியவில்லை. ஏற்கனவே உள்ள பழைய பேருந்துகளுக்கு லிப்ஸ்டிக் அடித்து அதைத்தான் இயக்குகிறார்கள். பிங்க் நிற பஸ்கள் ஏறத்தாழ 5,000 பேருந்துகள் காலாவதி பேருந்துகள் உள்ளது.இதில் செல்ல மக்கள் மிகவும் அச்சப்படுகிறார்கள். ஏற்கனவே ஓசிபஸ் என்று தி.மு.க. அமைச்சர்கள் முதல் தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களை கேலி செய்தார்கள். அதனால் மகளிர்கள் சரிவர அதை பயன்படுத்துவதில்லை. ஆனால் ஒருமுறை பயணம் செல்வதை அதை நான்கு முறையாக கணக்கு காட்டி அதிகமாக பயணம் செய்ததாக ஒரு போலியான விளம்பரத்தை தி.மு.க. செய்கிறது.காலாவதியாக உள்ள பிங்க் நிற பஸ்கள் உங்களை ஒருபோதும் கரை சேர்க்காது என்பதை உதயநிதி புரிந்து கொள்ள வேண்டும்.ஆகவே இன்றைக்கு பிங்க் நிற பஸ்சுக்கு மக்கள் பை-பை என்று டாடா காட்டிவிட்டு, எடப்பாடியார் செல்லும் பச்சை நிற பஸ்க்கு வெல்கம் - வெல்கம் வரவேற்று வெற்றி வாகை சூட தயாராகி விட்டார்கள். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# வத்தலக்குண்டுவில் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த கோரி: இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் கையெழுத்து இயக்கம்



**வத்தலக்குண்டு, செப். 21-**

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு வில் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த கோரி இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் கையெழுத்து இயக்கம் நடத்தினர். அதில் திண்டுக்கல் தொகுதி எம்.பி பங்கேற்றார்.

வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு விபத்தில் சிக்கும் கொடைக்கானல் சுற்றுலா பயணிகள், சபரிமலை, குச்சனூர் செல்லும் பக்தர்கள் அதேபோல வத்தலக்குண்டு பேரூராட்சி மற்றும் சுற்றியுள்ள நூற்றுக்கு மேற்பட்ட கிராமங்களை சேர்ந்தவர்கள் பயன்படுத்தி வருகின்றனர். இங்கு போதிய வசதி இல்லாததால் பெரும்பாலானோர் மேல்சிகிச்சைக்குதிண்டுக்கல் மற்றும் தேனி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

போதிய டாக்டர்கள் இல்லை. எனவே வத்தலக்குண்டுஅரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என்று பல்வேறு சமூக அமைப்புகள் வலியுறுத்தி வருகின்றன. இந்நிலையில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினர் வத்தலகுண்டு அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என்று கோரி பத்தாயிரம் பேரிடம் கையெழுத்து வாங்கி அனுப்பும் இயக்கம் தொடங்கினர். அதன் துவக்க விழா நடந்தது. விழாவுக்கு கட்சியின் வத்தலக்குண்டு பஜார் கிளைச் செயலாளர் மாரி தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளர் ஸ்டாலின் ராஜா முன்னிலை வகித்தார். திண்டுக்கல் எம்.பி சச்சிதானந்தம் கையெழுத்து இயக்கத்தை முதல் கையெழுத்திட்டு துவக்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என்று பாராளுமன்றதேர்தல் பிரச்சாரத்தின் போதே பேசினேன். வத்தலக்குண்டு அரசு மருத்துவமனையில் 13 டாக்டர்கள் இருக்க வேண்டிய நிலையில் 3பேர் மட்டுமே உள்ளனர். ஒன்றிய அரசு மருத்துவ மேம்பாட்டுக்காக தமிழக அரசுக்கு தரவேண்டிய நிதியை அனுப்ப வேண்டும் மேலும் ஆங்கிலேயர் காலத்தில் சர்வேகல் ஊன்றிய திண்டுக்கல் சபரிமலை ரயில்வே திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்ற வேண்டும் என்றார்.

கூட்டத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினர் பாலாஜி உள்பட பலர் பேசினர். ஒன்றிய குழு உறுப்பினர்கள் வின்சென்ட், குணசீலன், பெருமாள் சாமி, சுரேஷ், தெய்வேந்திரன், பாண்டியம்மாள், பாண்டியன், சித்ராதேவி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முடிவில் வதிலை பஜார் கிளை உறுப்பினர் சோணை முத்தையா நன்றி கூறினார்.



● பள்ளிக்கல்வித்துறை சார்பில் சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற விழாவில், பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ்ப்பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்ற 142 மாணவ, மாணவியர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வழங்கி வாழ்த்தினார்.




● சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினுடன், தமிழ் பாடத்தில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் எடுத்த மாணவர்கள், மாணவிகள் குழுப்புகைப்படம் . எடுத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் அமைச்சர் அன்பில் மகேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



● முதல்வர் மு.க. ஸ்டாலின் நேற்று நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கத்தில், சென்னை மாநகருக்கு செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து கூடுதலாக நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.எம்.நாசர், மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், துணை மேயர் மு.மகேஷ் குமார், திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● வாரந்தோறும் 'மக்களுடன் சந்திப்பு' என்ற பெயரில் பிரச்சார பயணம் மேற்கொண்டு வரும் த.வெ.க. தலைவர் விஜய், நேற்று நாகப்பட்டினத்தில் ஆயிரக்கணக்கில் கூடியிருந்த தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் அவர் உரையாற்றினார்.




● திருவள்ளூர் மாவட்டம், செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் சார்பில் பொதுமக்களின் புகார்களுக்கு விரைந்து தீர்வு காண உருவாக்கப்பட்டுள்ள 'சென்னை குடிநீர் செயலி" என்ற புதிய கைபேசி செயலியை முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என். நேரு, எஸ்.எம்.நாசர், மேயர் ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, துரை சந்திரசேகர், துணை மேயர் மு.மகேஷ் குமார், மாவட்ட கலெக்டர் பிரதாப், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## ஜம்மு காஷ்மீரில் பயங்கரவாதிகளுடன் மோதல்:

# இந்திய ராணுவ வீரர் மரணம்

**உதம்பூர், செப். 21-**

ஜம்மு காஷ்மீரின் உதம்பூர் மாவட்டத்தில் பயங்கரவாதிகளுடன் நடந்த மோதலில் ராணுவ வீரர் வீரமரணம் அடைந்தார்.

ஜம்முவின் உதம்பூர், தோடா மற்றும் கதுவா மாவட்டங்களை இணைக்கும் சந்திப்பு பகுதியான உதம்பூரின் பசந்த்கர் பகுதியில், உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில் நேற்று முன்தினம் மாலை பாதுகாப்பு படையினர் தேடுதல் வேட்டையை தொடங்கினர்.

பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்பு படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், ராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்தார். மேலும், ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பைச் சேர்ந்த மூன்று முதல் நான்கு பயங்கரவாதிகள் அப்பகுதியில் சிக்கியுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது. தற்போது தோடா-உதம்பூர் எல்லை அருகே பயங்கரவாதிகளுக்கு எதிராக பாதுகாப்பு படையினர் தீவிர தாக்குதலை முன்னெடுத்து வருகின்றனர். பசந்த்கர் பகுதியில் அடிக்கடி பயங்கரவாதிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே மோதல்கள் நடந்து வருகிறது. கடந்த இரண்டு வாரங்களில் ஜம்மு - காஷ்மீரில் நடக்கும் இரண்டாவது பெரிய என்கவுன்டர் இதுவாகும்.

முன்னதாக, கடந்த வாரம் குல்காம் மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையின் போது ராணுவத்தின் ஜூனியர் கமிஷன் அதிகாரி உட்பட இரண்டு வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். இந்த என்கவுன்ட்டரில் இரண்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாக ராணுவம் தெரிவித்தது.

## தமிழகம் முழுவதும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள

# 2,715 பட்டதாரி ஆசிரியர்களுக்கு நுழைவுநிலை பயிற்சி தொடக்கம்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்

**சென்னை, செப். 21-**

சென்னையில் நேற்று தமிழ்நாடு பள்ளி கல்வித்துறை சார்பில் நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற விழாவில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 2,715 பட்டதாரி ஆசிரியர்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (செப். 20) தொடக்கி வைத்தார்.

இந்த விழாவல் பட்டதாரி ஆசிரியர்களுக்கான நுழைவு நிலைப் பயிற்சியைத் தொடங்கி வைத்த முதல்வர் மு.க.ஸ்டாலின் பயிற்சி நூலை வெளியிட்டதுடன் தமிழகம் முழுவதும் ரூ. 277 கோடி மதிப்பீட்டில் 243 பள்ளிகளில் புதிய கட்டுமானங்களுக்கும் அடிக்கல் நாட்டினார். அதேபோல, சென்னையில் தமிழ்நாடு பாரத சாரண - சாரணியர் இயக்கத் தலைமை அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டவும் முதல்வர் அடிக்கல் நாட்டினார்.

அதன்பின், அவர் ரூ.94 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள 59 பள்ளிக்கட்டிடங்களைத் திறந்து வைத்ததுடன், 2024-2025 கல்வியாண்டில் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் தமிழ்ப் பாடத்தில் முழு மதிப்பெண் பெற்ற 143 மாணவர்களுக்கு தலா ரூ.10 ஆயிரம் ஊக்கத்தொகையை வழங்கி பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர்கள் கே. என் நேரு, மா. சுப்பிரமணியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## இந்திய - அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தை:

# அமெரிக்கா செல்கிறார் பியூஷ் கோயல்

**புதுடெல்லி, செப். 21-**

இந்திய - அமெரிக்க வர்த்தக பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் அடுத்த சில நாட்களில் இந்திய வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல் அமெரிக்கா செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அமெரிக்க அதிபராக 2-வது முறையாக பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், அமெரிக்கா ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு உலக நாடுகள் விதிக்கும் வரிக்கு ஏற்ப பதில் வரி விதிக்கப்படும் என்று அறிவித்தார். அதன்படி, இந்திய பொருட்கள் மீது 25% வரி விதித்தார். இது ஆகஸ்ட் 7-ம் தேதி அமலுக்கு வந்தது. அத்துடன், ரஷ்யாவிடம் இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவதாக கூறி கூடுதலாக 25% வரி விதித்தார். இது ஆகஸ்ட் 27-ம் தேதி அமலுக்கு வந்தது. இதன்மூலம், இந்திய பொருட்கள் மீது 50% வரி விதிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, இரு நாட்டு உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதற்கிடையே இந்தியா - அமெரிக்கா இடையே இரு தரப்பு வர்த்தகம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அமெரிக்காவின் வர்த்தகத் துறை துணை பிரதிநிதி (தெற்கு மற்றும் மத்திய ஆசியா) பிரெண்டன் லிஞ்ச் தலைமையிலான குழுவினர் கடந்த 16-ம் தேதி டெல்லி வந்தனர். இரு தரப்பு வர்த்தக பேச்சுவார்த்தைக்கான இந்திய பிரதிநிதியும், மத்திய வர்த்தகத் துறை சிறப்புச் செயலருமான ராஜேஷ் அகர்வால் தலைமையிலான குழுவினரை லிஞ்ச் குழுவினர் சந்தித்துப் பேசினர்.

இந்நிலையில், இந்தியா - அமெரிக்கா இடையேயான வர்த்தக பேச்சுவார்த்தையை முன்னெடுத்துச் செல்வதற்காக வர்த்தகத்துறை அமைச்சர் பியூஷ் கோயல், இன்னும் சில தினங்களில் அமெரிக்கா செல்ல உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. வர்த்தக பேச்சுவார்த்தைக்காக கடந்த மே மாதம் பியூஷ் கோயல் அமெரிக்கா சென்றிருந்தார். அப்போது, அமெரிக்க வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக்கைச் சந்தித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தினார். இம்முறையும் அவர் ஹோவர்ட் லுட்னிக்கைச் சந்தித்துப் பேசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.



● மறைந்த முன்னாள் சபாநாயகர் சேடபட்டி இரா.முத்தையாவின் 3-ம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு முத்தப்பன் பட்டியிலுள்ள அவரது நினைவிடத்தில் அமைச்சர்கள் பெரியகருப்பன், தங்கம் தென்னரசு ஆகியோர் மலர்வளையம் வைத்து மரியைதை செலுத்தினர். இந்நிகழ்வில் எம்.எல்.ஏ க்கள் கோ.தளபதி, காதர் பாட்சா (எ) முத்துராமலிங்கம், மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



● மதுரை மேற்குதொகுதிக்குட்பட்ட கீழமாத்தூர் ஊராட்சி சிஎஸ்ஐ பள்ளியில் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் சுற்றுசுவர் கட்டுவதற்கான பூமிபூஜையை முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் உசிலை ஜெயபால், பரவை ராஜா, கு.திரவியம், நீதிகாந்த், வெற்றி, விவேக், தங்கராஜ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.